
# காயத்ரி





சுஜாதா

விசா பப்ளிகேஷன்ஸ்

# காயத்ரி

**கா**யத்ரியைச் சந்திக்கும் முன் - சென்னைக்கு வரும் போதெல்லாம் நான் மூர்மார்க்கெட் செல்வேன். அங்கே ஒரு 'பாய்' எனக்குப் பரிச்சயம். பழைய புத்தகக் கடை பாய். எத்தனை தான் மக்களிடையே இலக்கிய உணர்வும் மறுமலர்ச்சியும் விழிப்பும் இருந்தாலும் பணத் தேவை என்று ஒன்று இருக்கிறதே. எனவே மூர்மார்க்கெட்டில் சில அபூர்வ இலக்கியங்கள் எனக்குக் கிடைக்கும். நான் இந்தத் தடவை மூர் வந்தது, ஒரு பிரபல வாரப்பத்திரிகையின் இரண்டு வருஷப் பழைய ஒரு இதழுக்காக. அதில் என் கதை வந்திருந்தது. புத்தகமாக வெளியிடுகையில் விட்டுப்போய் விட்டது. எனவே மூர்மார்க்கெட் பாய் அந்தப் பத்திரிகை அடுக்கை என் முன் தள்ளி, 'பொறுக்கிக்கிங்க அய்யரே' என்றான். தேதி வாரியாக இல்லாத ஐந்து வருஷச் சரக்கில் ஒரு வருஷத்தின் ஒரு மாதத்தின் ஒரு வாரத்தைத் தேடுவது ஏறக்குறைய இயலாத காரியம். முயற்சியைக் கைடுவிடுகிற சமயம் அந்தப் பத்திரிகைகளின் நடுவே அந்த நீல நிற நோட்டுப் புத்தகம் தலை காண்பித்தது. நூறு பக்க நோட்டு பைண்டு பண்ணி இருந்தது. அதைத் திறந்ததும்-

அவசரம்!

அவசியம்!

என்று சிவப்பில் இரண்டு வார்த்தைகளைப் பார்த்துத் திடுக்கிட்டேன். அதன் கீழ் திருக்குறள் போல் இரண்டு வரிகள்-

அவசியம் நீங்கள் இதைப் படிக்க வேண்டியது.

அவரசம் நீங்கள் உடனே வரவேண்டியது.

புரட்டினேன்.

காயத்ரி ராஜரத்னம் 18-1-76

புரட்டினேன்.

சின்னச் சின்ன நெருக்கமான கையெழுத்து. பெண்மை நிச்சயம் தெரியும், மல்லாந்த, சற்று இடது பக்கம் சாய்ந்த கையெழுத்து. ஆரம்பப் பக்கங்கள் ஸ்பஷ்டமாக இருந்தன. போகப் போக எழுத்து குளறிக் கொண்டே வந்தது. கடைசியில் ரொம்ப மோசம்.

''என்ன! கிடைச்சுதா அய்யரே?''

''இல்லே பாய். வேறு ஏதோ கிடைக்குது.''

''இன்னாது தொடர் கதையா? பைண்டு பண்ணதா? ''

''அதெல்லாம் இல்லை. இது புது தினுசு கதை.''

''ஸ்கூல் நோட்டு! இது எப்படி இதிலே கலந்தது? ''

''பாய் இந்தநோட்டை விலைக்குக் குடுப்பியா?''

''இப்படிக் கொண்டா.''

பாய் தன் கண்ணாடியை 'அஜிஸ்ட்' செய்து கொண்டு அந்த நோட்டைப் புரட்டி ஒரு பக்கத்தை மாதிரி பார்த்தான். அதைப் புத்தகத்தில் சேர்ப்பதா தொடர் கதையா என்று தீர்மானிக்காமல்- என் ஆர்வத்தை அளக்கிற ரீதியில்-

''ஒண்ணார் ரூபாய் கொடுத்துட்டுப் போய்க்கினே இரு. இப்பதான் போணியாவுது.''

''ஒண்ணரை ரூபாயா! வேண்டாம் பாய்.''

''எடுத்துக்க. கையால கஷ்டப்பட்டு எளுதியிருக்குது.''

''ஒண்ணரை ரூபாய் அக்கிரமம் பாய்!'' முதல் பக்கத்தின் வரிகளை மாதிரி படித்தேன்.

'ஸ்டேஷனுக்கு விஜி, ராஜூ, அப்பு, அம்மா, அப்பா எல்லோரும் வந்திருந்தார்கள். அவர் சைடிலிருந்து ராம கிருஷ்ணன் என்கிற ஒரே ஒரு மீசை சினேகிதர் வந்திருந்தார். ஹனிமூனுக்கு அத்தனைபேர் வழியனுப்ப வந்திருந்தது எனக்கு வெட்கமாக இருந்தது...'

''இந்தா பாய் ஹனிமூன்.''

''என்னது?''

''இந்தா பணம் ஒண்ணரை ரூபாய்.''

மின்சார ரெயிலில் படித்துக் கொண்டிருந்தேன். பஸ்ஸில் படித்துக் கொண்டிருந்தேன். காப்பி சாப்பிடுகையில், துங்கப் போகுமுன், தூக்கத்திலிருந்து திடுதிப் என்று எழுந்து அதிகாலைக்குள் காயத்ரியின்-அதை என்ன என்று சொல்வது, டயரி என்றா, புத்தகம் என்றா, கதை என்றா-அதை முடித்து விட்டேன். இப்போது அவளைச் சந்திக்க அவரச அவசரமாகக் சென்று கொண்டிருக்கிறேன்.

காயத்ரி யாரென்று எனக்குத் தெரியாது. அவளை நேரில் பார்த்திரா விட்டாலும் அவளைப் பற்றிய அன்யோன்யமான பல விவரங்கள் எனக்கு தற்செயலாகத் தெரிந்திருக்கின்றன. அவள் உபயோகிக்கும் முகப்பவுடரின் பெயர்... (எக்ஸாட்டிக்கா) அவள் மார்பின் அளவு (முப்பத்து நாலு) எத்தனையோ விவரங்கள். முன்பின் பரிச்சயமில்லாத ஒரு பெண்ணை, அதுவும் மற்ற ஒருத்தனின் மனைவியைச் சந்திக்க இவ்வளவு ஆவல் கொண்டு, பதற்றம் கொண்டு ஓடுவதில் மெலிதான முட்டாள்தனம் இருக்கிறது என்பது எனக்குத் தெரியும். இருந்தும் காயத்ரியைச் சந்திக்க வேண்டியது எனக்குக் கட்டாயமாகி விட்டது. எப்படி? இது உங்களுக்குப் புரிய காயத்திரியின் நூறு பக்கங்களை நீங்கள் படிக்க வேண்டும். அந்தப் பக்கங்களை இப்போது தருகிறேன். படிக்கும் முன் எச்சரிக்கை.

உங்கள் வீட்டில் தமிழ் படிக்கக் கூடிய சின்னப் பையன்கள், பெண்கள் இருந்தால் அவர்கள் இந்தப் பக்கங்களைப் படிக்க அனுமதிக்காதீர்கள். அந்த இளம் மனங்களைப் பதிக்கும், தாக்கும் அபாயம் காயத்ரியின் வாக்கியங்களில் இருக்கிறது. அப்புறம் கோபித்துக்கொண்டு

ஆசிரியருக்குக் கடிதம் எழுதாதீர்கள். இனி? காயத்ரி (உண்மையானவள்)

## ஒன்று

**கா**யத்ரி ராஜரத்தினம்

காயத்ரி

18-1-76

ஜி.

Intensely personal. Bought in Bangalore on the day I lost my virginity.

ஸ்டேஷனுக்கு விஜி, ராஜு, அப்பு, அம்மா, அப்பா எல்லோரும் வந்திருந்தார்கள். அவர் சைடிலிருந்து ராமகிருஷ்ணன் என்கிற ஒரே ஒரு மீசை சினேகிதர் வந்திருந்தார். ஹனிமூனுக்கு இத்தனை பேர் வழியனுப்ப வந்திருந்தது எனக்கு வெட்கமாக இருந்தது. இவர் என்னையே பார்த்துக் கொண்டிருந்ததுகூட வெட்கமாக இருந்தது. நிமிஷத்திற்கு நிமிஷம், அதுவும் பார்வையா இது? சும்மா உருவி விடுகிற தடவி விடுகிற பார்வை. அப்பு இரண்டு கூடை நிறைய பழம் எல்லாம் கொண்டு வந்திருந்தது. என்னைப் பார்த்து ரொம்பச் சிரித்தது. ஒரு காலத்தில் அப்பு என்னை லவ் பண்ணித்து. லெட்டர்கூட எழுதி, மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, அப்புறம் நீ என் சகோதரி போல, தங்கச்சிபோல, அய்யா கிட்ட சொல்லிடாதே என்று சர்ரண்டர்.

It was fun. என்னாலேயும் அவரைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. Do I deserve him? ரொம்ப சார்மிங். ரொம்ப அழகு. சற்று ஜாஸ்திதான். என்னைவிட நல்ல சிவப்பு. நல்ல நிறம். தலைமயிரை அப்படியே விரலைச் செலுத்திக் கசக்கலாம் போல இங்கிருந்தே ஆசையாக இருக்கிறது. உதடுகள் ஆண்பிள்ளைக்கு எங்கேயாவது ரோஜா நிறத்தில் இருக்குமோ? கருப்பான கண்கள். மூக்குக்குத் தங்க வளையல்களை எல்லாம் அவிழ்த்துத் தந்து விடலாம். அழகில் நான் அவருக்குப் பொருத்தமா என்றுதான் சந்தேகம்

வருகிறது. என்னைத் தனியாகப் பார்த்தால் பாய்ஸ் எல்லாம் விஸிலடிப்பார்கள். இருந்தாலும் இந்த ஆளுடன் வைத்தால் என் பல்ப் அணைந்து போய்விடும் என்று தோன்றுகிறது.

அப்பா ஏதோ செல்ல குழந்தை மாதிரி சிரிக்கிறார் சிரிப்பிலேயே ஒரு சின்ன மரியாதை மமதை. ஆரோக்கியமான ஈறுகள், பற்கள். முந்தாநாள் தான் பிறந்தது போல இருக்கிறார் ரத்னா! ஓ மை டியர் ரத்னா! எனக்கு என்ன என்னவோ கதம்பமாக உணர்ச்சிகள். அம்மா என் தலையில் பூ வைக்கும்போது அழுகை வருகிறது. யோசித்துப் பார்த்தால் அம்மா அப்பாவிடமிருந்து பிரிந்து இதுவரை ஒரு ராத்திரி கூட இருந்ததில்லை. வீட்டிலிருந்தே படித்து, ஹாஸ்டல் என்றாலே என்ன என்று தெரியாது. ஒரு எக்ஸ்கர்ஷன்! கூட அனுப்பமாட்டார்கள் - முதல் நாள். முதல் ராத்திரி. With a total stranger. ரயிலில் ரொம்ப மோசம். எதிரே வயசான தம்பதிகள் இருப்பதைக் கொஞ்சம் கூட மதிக்காமல் ரொம்ப உடம்பொல்லாம் தொட்டுத் தொட்டு... எனக்கா கூசுகிறது. முதல் தடவை வேறு. அந்தக் கிழவர் என்ன நினைப்பார். அகலமாகக் குங்குமம் இட்டுக் கொண்டு அரக்குக் கலர் புடவை கட்டிக்கொண்டு மகாலட்சுமி போல இருந்த அந்த அம்மா என்ன நினைப்பாள்? ரத்னாவை ஒரு தடவை சரியாகக் கிள்ளிவிட்டேன். ஸாரி ரத்னா.

## 2

பெங்களுக்கு வருகிறவர்கள் என்ன செய்வார்கள்? லால்பாக், விதான் ஸௌதா என்று திரிய மாட்டார்களோ? போட்டோ பிடிக்கமாட்டார்களோ? அல்லது எத்தனையோ சினிமா தியேட்டர்களில் ஒன்றில் போய் உட்கார மாட்டார்களோ? ம்ஹூம் ரத்னா அப்படி இல்லை. உட்லண்ட்ஸுக்கு வந்தோம். பல் தேய்த்தோம். ரூமிலேயே நாஷ்தா ஆர்டர் ஆகிறது. அந்த சர்வருக்கு எதிரிலேயே ரூம் ஜன்னல் கதவுகளை ஒவ்வொன்றாகச் சாத்தினார். அவன் என்ன நினைப்பான்? எனக்கு வெட்கம் உடம்பெல்லாம்

மொய்க்கிறது. எல்லோருக்கும் தெரியும் நாங்கள் என்ன செய்யப்போகிறோம் என்று. அவர்கள் கண்களே சொல்லறது. அந்த ரிஸப்ஷன் இளைஞன், அந்த வெள்ளைக் குல்லாய் சர்வர், சிவப்பான ரூம்பாய். எனக்கு ரத்னா மேல் நிஜமாகக் கோபம் வந்தது. Don't make it obvious என்றேன். சிரிக்கிறார்.

## 3

**வ**லி! அது ஒன்றுதான் ஞாபகமிருக்கிறது. விஜி சொல்லிருக்கிறாள். அம்மாவும் சொல்லியிருக்கிறாள். இருந்தாலும் இப்படி வலிக்கும் என்று நினைக்கவில்லை. இன்பம், அது, இது என்பதெல்லாம் கதை! மாதிரிக்குக் கூட இல்லை. ரத்னாவை அந்த மெலிய இருட்டில் பார்க்கும் போது கொஞ்சம் வியர்வை. பல்லைக் கடித்துக்கொண்டு ஏதோ Reciprocating Engine மாதிரி, மிஷின் மாதிரி. எனக்கு அச்சமாக இருந்தது. ரத்னா இப்போது அழகாக இல்லை,அப்புறம் ரத்னாவை எழுப்பி வலியைப் பற்றிச் சொன்னேன்.

''கவலைப்படாதே. விரைவில் போய்விடும்.''

''ஓ நோ! வேண்டாம்''என்றேன். சொன்னதைக் கேட்காமல் ரத்னா காலையும் என் மேல் படை எடுத்தார். என்னுள் வேதனை கொப்பளித்தது. கடவுளே! இப்படியா வலிக்கும்.

## 4

**ப**திளைந்து நாட்கள் கனவுபோல் தான் சென்றன. டாக்ஸிப் பிரயாணங்கள், ஓட்டல் அறைகள் - (எல்லா ஓட்டல் அறைகளுக்கும் ஒருவித வாசனை இருக்கிறது. கொஞ்சம் சிகரெட், கொஞ்சம் ஊதுவத்தி கொஞ்சம் வண்ணான் சலவை, கொஞ்சம் சாவு, கொஞ்சம் கண்ணீர் கொஞ்சம் என்ன என்னவோ!)

படகில் பிரயாணங்கள், பச்சைப் புல்வெளிகள். ரத்னா எப்போதும் சிரித்துக்கொண்டு, எப்போதும் என்மேல் பட்டுக்கொண்டு, விளம்பரத்தில் வருகிற கணவன் மனைவி போலவே உலாவினோம். ராத்திரிதான் ஏன் வருகிறது என்று பயமாக இருந்தது. இன்றைத் தேதி வரை நான் அதை விரும்பவில்லை.

## 5

ரத்னாவின் புன்னகைபற்றி ஸ்பெஷலாக எழுத வேண்டும். ஸ்திரமான அழகான புன்னகை. திகட்டும் புன்னகை. எதற்கெடுத்தாலும் புன்னகை.

''ரத்னா பார்க் போவோமா?

புன்னகை.

''ரத்னா இன்றைக்கு வேண்டாம்.''

புன்னகை.

''போதும் ரத்னா போதும்.''

புன்னகை. அழகான அதிகப்படியான புன்னகை.

## 6

ஒரு சம்பவம். ஊட்டியில் மெலிதான குளிர். எனக்குக் கோட்டு அணிவித்து மிகவும் உற்சாகத்துடன் இருந்தேன். வெயில் தரும் இதம் அற்புதம். போதும் போதாததுமான சூடு. பக்கத்தில் புதிய கணவன். அழகான profile பச்சை, பச்சை, பச்சை. எங்கு நோக்கினும் பச்சை. ஓகோ என்று ஆரவாரம் செய்யும் புஷ்பங்கள்.

காயத்ரி என்று முழுப்பெயர் சொல்லித்தான் கூப்பிடுகிறார். அம்மா, விஜி மாதிரி 'யத்து' என்று கூப்பிட மறுத்தார். ரொம்ப நேர்மையாகப் பேசினார். எஸ்டேட்டிலிருந்து, குத்தகையிலிருந்து, வாடகையிலிருந்து எவ்வளவு வரும். (ஏராளம்) எவ்வளவு வேலைக்காரர்கள்,

நான் மெட்ராஸ் போனதும் செய்ய வேண்டியது என்ன? எஸ்டேட் விவரங்களில் தலையிட வேண்டியதே இல்லை. கிளப் போகலாம். சினிமா போகலாம். ஹேர் ஸ்டைலை மாற்றிக் கொள்ளலாம். Irwing Wallace படிக்கலாம். இஷ்டமிருந்தால் பாப்பா பெற்றுக்கொள்ளலாம்.

ஒரு நண்பரின் கார் கொண்டு வந்திருந்தோம். மலைப் பாதையில் ஏறிச் சரிந்து அந்த அருவி தெரியும் இடத்தில் காரை நிறுத்தி, சற்று நேரம் அருவி சொன்ன பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தோம். அழுக்காக ஒரு சின்னப் பையன் வந்து, 'கார் துடைக்கிறேன் சார்' என்றான். 'வேண்டாம்டா' என்றார்.

அவன் எங்களை விடவில்லை. நாங்கள் சென்ற இடம் எல்லாம் நிழல் மாதிரி துரத்திக் கொண்டே வந்தான். தூரத்தில் இன்னும் அழுக்காக, சின்னதாக ஒரு தங்கை வேறு. புன்னகையுடன் 'போடா', தொந்தரவு செய்யாதே' என்றார் திரும்பத் திரும்ப. எனக்கு அலுப்பாக இருந்தது. ''பையா உனக்குக் க்ார் துடைக்க எத்தனை பைசா வேண்டும்?'' என்றேன். ''நாலணா'' என்றான். ஹாண்ட் பாக்கிலிருந்து நாலணா எடுத்து, ''கார் துடைக்க வேண்டாம், இதை எடுத்துக்கொண்டு ஒழி'' என்றேன். 'இரு' என்று அந்த நாணயத்தை என்னிடமிருந்து புன்னகையுடன் வாங்கித் தன் பையிலிருந்த கொஞ்சம் நாணயங்கள் எடுத்து அவனிடம் காட்டிப் புன்னகையுடன், '' எல்லாம் உனக்குத்தான் எடுத்துக்கோ'' என்று சொல்லித் தூரத்தில் முள் புதருக்குள் அவைகளை வீசி எறிகிறார். பையன் ஓடிப்போய் அந்தப் புதருக்குள் பாய்ந்து கை விட்டுத் தேட, எப்படி என்று என்னைப் பார்த்து புன்னகை செய்கிறார் ரத்னா. அந்தப் புன்னகையை என்னால் ரசிக்க முடியவில்லை. வயிற்றில் ஓர் 'என்னவோ' உணர்ச்சி ஆரம்பித்தது. நாங்கள் கிளம்பி வருகையில் அந்தப் பையன் இன்னும் தேடிக் கொண்டிருந்தான். கையெல்லாம் ரத்தக் கீறல்கள்.

## 7

நட்ட நடு ராத்திரி, படுக்கையை விட்டு எழுந்து டெலிபோன் பேசுகிறார். டிரங்க்கால் போட்டு.

'' நன்றாக இருக்கிறாயா சரஸு?''

''மருந்து சாப்பிட்டாயா?''

''இன்னும் இரண்டு நாளில் வந்துவிடுவேன்.''

''பரவாயில்லை.''

''பரவாயில்லை. முதலில்தான் கொஞ்சம் சிரமம்.''

இந்தப் 'பரவாயில்லை' பதில்கள் எந்தக் கேள்விக்கு? என்னைப்பற்றியா? சரஸு அவர் அக்கா. கல்யாணத்தில் பார்த்தது ஞாபகத்திற்கு வருகிறது. காதில் கழுத்தில் நகைகள். நெற்றியில் பொட்டு கிடையாது. நாற்பது வயதிருக்கலாம். நல்ல உயரம். விதவை. கணவர் ஆர்மியில் மேஜராம். பாகிஸ்தான் சண்டையில் இறந்து போய் விட்டாராம். நாற்பது வயதுக்கு நல்ல அழகாகத்தான் தோன்றினாள்.

## 8

நாங்கள் மெட்ராஸ் திரும்பிவிட்டோம். சரஸ்வதி ஸ்டேஷனுக்கு வந்திருந்தாள். சரஸு. என்றுதான் கூப்பிடுகிறார். அதுவும் ஏறக்குறைய சர்ஸு '' அதற்குள் இளைத்து விட்டாய்'' என்றாள் ரத்னாவை பார்த்து. என்னைப் பார்த்து, ''வாம்மா குழந்தை'' என்று தொட்டுத் தடவிக் கொடுத்து ரொம்பவும் அனுசரணையாகத்தான் இருந்தாள். கார் நன்றாகவே ஓட்டுகிறாள். நெயில் பாலிஷ் நீல நிறத்தில். கச்சிதமாகத் தலையை முடிந்திருந்தாள். கத்தரிப்பூ கலரில் ரெட்டைப் பேட்போட்டுப் பட்டுப் புடவை. கார் ஓட்டிக்கொண்டே பேசினாள்.

''ரத்னா ரொம்ப தொந்தரவு செய்தானோ!''

''இல்லை அக்கா'' என்றேன்.

''அக்கா என்று கூப்பிடாதே. சரஸு என்று கூப்பிடு...''

''இருந்தாலும் நீங்கள் என்னைவிடப் பெரியவர் இல்லையா?''

''சரஸு என்றே கூப்பிடு. என்ன ரத்னா? பெண்டாட்டி வந்ததும் என்னை மறந்து விடுவாய்.''

''சேச்சே! உன் ஆஸ்த்மா எப்படி இருக்கிறது?''

''பரவாயில்லை குழந்தை.''

''உன் இன்ஜெக்ஷன் எல்லாம் எடுத்துக் கொண்டாயா? டாக்டர் வந்தாரா? பணம் வந்ததா? முத்து திரும்பி விட்டானா...?

நான் சுவாரசியம் இல்லாமல் மெல்ல இடது வலது பக்கம் பார்க்கிறேன். சென்னையில் கொஞ்சம் வெறுமை அதிகமாக இருக்கிறது. திடீர் என்று அம்மாவையும் விஜியையும் பார்க்க வேண்டும்போல் இருக்கிறது. இப்படி என்னைக் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டாற்போல் இருக்கிறதே அம்மா! அவர்கள் எல்லோரும் கோயமுத்தூர் போயிருப்பார்கள். அப்பு மெட்ராஸ் வரும்போது நிறைய வீட்டுக்கு உண்டான சாமான்கள் அனுப்பி வைக்கிறார்கள். ஏகப்பட்ட பழங்கள் , அப்பளம், ரசப்பொடி. ''அந்தச் கிச்சன் சாமான்கள் எல்லாம் எதற்கு? நம் வீட்டில் நிறைய இருக்கிறது. அதெல்லாம் அனுப்ப வேண்டாம் என்று எழுதிவிடு.''

## 9

மத்தியானம் முழுதும் தூங்கினேன். ஞாபகம் வந்து விட்டது. ஆனால் கையைக் காலை அசைக்க முடியவில்லை. யாரோ மாரில் ஏறிக்கொண்டிருப்பது போல. ரத்னா என்று கூப்பிடுகிறேன். சப்தம் வரவில்லை. அம்மாவைக் கூப்பிடுகிறேன். விஜியைக் கூப்பிடுகிறேன். அப்பாவை, ஏன், அப்புவைக்கூட.

எப்படியோ உலுக்கிக் கொண்டு எழுந்தேன். எதிரே சரஸு நின்று கொண்டிருந்தாள். என் புடவை முழங் காலுக்கு மேல் விலகியிருக்கிறது. சரி பண்ணிக்கொண்டு அவளைப் பார்த்தேன். சிரித்தாள். "ஏன் டயர்டாக இருக்கிறாயா?" என் அருகில் உட்கார்ந்து என் தலையைத் தடவிக் கொடுத்து, "உன் பீரியட் எப்போது?" என்றாள். மாத்திரை சாப்பிடுவதை சொன்னேன். " உடனே அதை நிறுத்து. யூட்டிரஸ் அஃபெக்டாகிவிடும்."

கோடிக்கனக்கான பேர் சாப்பிடுகிறார்கள் என்று சொல்ல விரும்பினேன். Sarasu did a very strange thing என்னை மெதுவாகத் தலையைத் தடவிக் கொண்டே இருந்தவள் அன்புடன், ஆதூரத்துடன், முத்தம் கொடுத்தாள். அவள் போட்டிருந்த பர்ஃப்யூம் மணத்தையும் மீறி வியர்வை நாற்றம் என்னைத் தாக்கியது. "நீ எனக்குக் குழந்தை மாதிரி" என்றாள். இழுத்துச் சென்றாள். அவள் கணவன் போட்டோ பெரிசாக மாட்டியிருந்தது. "தினம் தினம் மாலை போடுகிறேன். தேசத்துக்காச் செத்துபோனார். பிரசிடென்ட்டிடமிருந்து கையெழுத்துப் போட்டுக் கடிதம் வந்தது" என்றாள். அப்புறம்.

## 10

**ரா**த்திரி ரத்னாவைத் தனியாகக் கேட்டேன். 'சரஸு நம்முடன் இருக்கப்போகிறாரா?"

"பின்னே?" என்றார்.

"எவ்வளவு நாள் நம்முடன் இருக்கப் போகிறார்?"

"ஏன்? எப்போதுமேதான்."

மறுபடி புன்னகை.

# இரண்டு

**கா**யத்ரியின் நோட்டுப் புத்தகம் எனக்குக் கிடைத்த மூர்மார்க்கெட் சந்தர்ப்பம் உங்களுக்கு ஞாபகமிருக்கும் என நினைக்கிறேன். இல்லாதவர்கள் சென்ற இதழுக்கு ஓடவும். காயத்ரியின் வாக்கியங்கள் அப்படியே தருவதற்கு மற்றொரு காரணம்: நான் காயத்ரியைச் சந்திக்கச் செல்லுமுன் வேறு ஒருவராவது இந்த வரிகளைப் படிக்க வேண்டும் என விரும்புகிறேன். அது ஏன் என்பது முழுவதும் அவளை படித்ததும்தான் புலப்படும்.

வா காயத்ரி.

## 1

**ச**ரஸு எனக்குப் பட்டுப்புடவை பரிசாகக் கொடுத்தாள். எதற்கு என்று கேட்டேன். ''சும்மாதான் எனக்கு அந்த மாதிரி ஃப்ளாஷியாக எல்லாம் உடுத்திக் கொள்ள முடியாது. நீ சின்னப்பெண். உனக்கு எது கட்டினாலும் நன்றாக இருக்கும். நீ உடுத்திக்கொள் உனக்கே உனக்கு'' என்றாள்.

கருநீல வர்ணப் புடவை, பெரிய ஜரிகை. நான் வாங்கிக் கொண்டேன். ''இன்றைக்கே உடுத்திக் கொள்ள வேண்டும்'' என்றாள். நான் சாமிமேல் பாரத்தைப் போட்டு நாள் நன்றாக இல்லை என்று தள்ளிப் போட்டு விட்டேன். நான் அதை அணிந்து கொள்ள மாட்டேன். It will smell of her.

## 2

**இ**ந்த வீட்டை வர்ணித்தாக வேண்டும். பெரிய கருங்கல் சுவர் போட்டு அதற்கு மேல் உடைந்த கண்ணாடித் துண்டுகள் பதித்து காம்பவுண்டு சுவர். வாசலில் பச்சைப் பெயிண்ட் அடித்த மரக்கும்பாச்சிக்குள் கூர்க்கா, '' ஸலாம் மேம்ஸாஹப்'' என்று மூஞ்சி பூரா சிரிப்பான். சீனக் கண்கள். அவனுக்கு அறுபது வயது என்றாலும் இருபது வயது

என்றாலும் நம்பலாம் அப்புறம் அவுட் ஹவுஸ். அதில் சாமிநாதய்யர் இருக்கிறார். பாவாடை, தாவணி போட்டுக் கொண்டு அவர் பெண் இருக்கிறது. 'அய்யர்' சமையல் செய்கிறார். பெண் சுற்றுக்காரியம். பெண் ஏழைதான். ஆனால் ரவிக்கை எல்லாம் பயங்கர ஸ்டைலாகத்தான் வைத்திருக்கிறது. முதுகில் அதல பாதாளத்துக்கு வெட்டு சரிகிறது. நல்ல வளர்த்தியான மார்பகங்கள். ரத்னாவைக் கண்டால் மார்பில் ஸாரி பூணூல்தான். நல்ல கறுப்பு. என்னை மாமி என்று கூப்பிடுகிறது. (கறுப்பை எல்லாம் யார் கவனிக்கிறார்கள் ... ஆனால் இது வரை ரத்னா அதை வேறு மாதிரிப்பார்த்து நான் பார்த்ததில்லை.) சரஸு தன் நகைகளை எல்லாம் கழற்றி பிளாஸ்டிக் டப்பாவுக்குள் வைத்துவிட்டு மார் வரைக்கும் டர்கிஷ் டவலைக் கட்டிக் கொண்டு பலகையில் உட்கார்ந்திருக்க, பெண் பாவாடையைத் தூக்கிக் கட்டிக் கொண்டு எண்ணெய் தேய்ப்பது வாரமிருமுறைக் காட்சி. எனக்கும் தேய்த்து விடுகிறேன் என்றது.வேண்டாம் என்று சொல்லிவிட்டேன்.

எனக்குப் பிறர் தொட்டால் கூசுகிறது. வீட்டில் அப்படி வளர்த்து விட்டார்கள். விஜி என்னைத் தொட்டதில்லை அம்மா என்னைத் தொட்டதில்லை. தம்பி, அண்ணன் காரர்கள் எல்லாம் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டார்கள். Girls are always dirty என்பார்கள். சரஸு மாதிரி குளிக்கும்போது ஜலகன்னிகை மாதிரி அரைகுறை உடையில் வெயிலில் பின்பக்கம் உலாத்துகிற பிஸினஸ் எங்கள் வீட்டில் கிடையவே கிடையாது. எல்லாக் கதவையும் சாத்திக் கொண்டுதான் காது திருகாணியைக் கூடக் கழற்றுவோம்.

சரஸுவை Amazon வகையில் தான் சேர்க்க வேண்டும் 5'8'' அல்லது 5'9'' இருப்பாள். ஒவ்வொரு கையும் குருவாயூர் கோயில் தூணை ஞாபகப்படுத்தும். நிறமும் ஏறக்குறைய ரத்னாவின் நிறத்தில் இருக்கிறாள். கொஞ்சம் அளவுக்கு அதிகமான வளர்த்தி இடுப்பில் இருந்தும் கட்டிப் பிடித்து அடக்கி டீக்காகவே டிரஸ் செய்து கொள்கிறாள்.

Merry widow என்று தான் சொல்ல வேண்டும். பாலசந்தர். எஸ்.பி முத்துராமன் படத்திற்குப் போகிறாள்.

வீட்டில் சரஸுவின் அறை தனியாக இருக்கிறது. மாடியில். கோடியில். அறைக்குள் அவள் காத்ரேஜ் அலமாரியை ஒரு தடவை திறந்து காட்டினாள். ஒரு லாக்கர் நிறைய அவள் மாமியார் நகைகள், சொந்த நகைகள் என்று வைத்திருக்கிறாள். கோவில் நகைகள் போலப் பவழமும் முத்தும் சிவப்பும் தங்கமும் ... வெள்ளமாகப் புடவைகள் என்ன என்னவோ ஃபாரின் சாமான்கள். அவள் கணவரின் போட்டோ மீசை வைத்து ராணுவ உடையில். சரஸுவின் கனத்தைத் தாங்கியிருப்பாரோ என்று சந்தேகமாக இருந்தது.

அறைகளுக்குக் குறைகள் இல்லை. எங்கள் வீட்டில் இருக்கிற ஒன்றரைப் பேருக்கு எத்தனை ரூம்! ரத்னாவுக்கு ஒரு லைப்ரரி. ஒரு ஏஸி ரூம். ஒரு ஆபிஸ் ரூம். ரத்னா என்ன வேலை செய்கிறார் என்று சரியாகத் தெரியாது. நிறைய சொத்து. சொந்த பிஸினஸ். Tool Steel என்றால் என்ன அர்த்தம்? அப்பா அதையெல்லாம் விசாரித்துதான் கொடுத்திருக்கிறார். பணத்துக்குக் குறைச்சலில்லை. குறைச்சல் சுதந்திரத்துக்குத்தான்.

பாண்டிபஜார் போக வேண்டுமா? காரில்தான் போக வேண்டும். கூட டிரைவர் வருவான். அந்த அய்யர் பெண்ணும் வருவாள். அந்த டிரைவரும் அவளும் பார்த்துக்கொள்கிற தினுசில் நிச்சயம் அவளை ஷெட்டில் கொண்டு சென்று திருட்டுத்தனம் செய்திருக்கிறான். அந்தப் பெண் என் நகைகளையும் அலங்காரத்தையும் ஊடுருவிப் பார்க்கிற தினுசும் தவறாக இருக்கிறது.

ஒரு லெட்டர் எழுத வேண்டுமா? ''நீங்க எழுதிக் குடுங்கம்மா. நான் போஷ்ட் பண்ணிவிடுகிறேன்.'' நடக்க வேண்டுமா? கூடவே வாலைப் பிடித்துக் கொண்டு யாராவது வந்தாக வேண்டும். சமையல் செய்ய விருப்பமாக இருக்கிறதா? ''அய்யய்யே! அதெல்லாம் எதற்கு?

பன்னிரண்டு பேருக்கு சமையல் ஆக வேண்டும் நீங்க அயிட்டம் சொல்லுங்கோ: நான் பண்ணிக் கொடுக்கிறேன்.''

## 3

**ச**ரஸு-சரஸு-சரஸு-சரஸு. அரை மணிக்கு ஒரு தடவை சரஸு. எப்படியாவது எதிலாவது குறுக்கிட்டு விடுகிறாள். அவள்தான் மளிகை சாமான். அவள்தான் மாட்டுக்கு புண்ணாக்கு. பிக்சருக்கு ரிஸர்வேஷன்.

எனக்கு சரஸு மேல் பொறமை இல்லை. இந்தச் சின்ன அதிகாரங்கள் எல்லாம் எனக்கு வேண்டாம். என்னைத் தனியாக விடப்படாதோ?

''எக்ஸாட்டிக்கா ஏன் யூஸ் பண்ணுகிறாய்? பாண்ட்ஸ் போட்டுக் கொள்ளேன்.''

''உன் ப்ரெஸ்ட் சைஸுக்கு நீ முப்பது நாலுதான் வாங்கணும்.''

நான் என்ன பாடி போட்டுக் கொண்டால் என்ன? எந்தப் பவுடரை எங்கே தடவிக் கொண்டால் என்ன? சரஸு Leave me alone.

வந்த ஒரு மாதத்தில் நாத்தனாரைப் பற்றிக் குற்றம் சொல்ல விரும்பவில்லை. எனவே ரத்னாவிடம் நான் தினசரி சரஸுவிடம் படும் ரோதனையைச் சொல்லவில்லை. ஆனால் ஒரு நாள் சொல்லி விட வேண்டும். அன்பால் அல்லது அன்பு போல் இருக்கிற ஏதோ ஒன்றால் கொல்கிறாள்.

கணவர் என்னிடம் மிக அருமையாகப் பழகுகிறார். ரத்னா is a gentleman. ரொம்ப polished ஆக இருக்கிறார் அவர் சினேகிதர்கள் எல்லோரும் நன்றாக நடந்து கொள்கிறார்கள். அவர் கிளப்பில் போய் ஒரு தடவை டென்னிஸ் ஆடினேன். கொஞ்சம் நீந்தினேன். ''You got a body dear lady'' ரத்னா! அவர் நண்பர்கள் என் மார்பின் மையத்தில் பார்க்கும் போதெல்லாம் அவர் கண்களில்

பொறாமையே இல்லை: So sure of himself எனக்குத் தான்
அவ்வப்போது பொறாமை ஏற்படுகிறது. மிஸஸ் முகர்ஜி
(கால் மி சஞ்சலா!) என்னை பார்த்து. நீ ரத்னாவுக்குப்
பொருத்தமில்லை'' என்று நேராகச் சொன்ன போது நான்
நாகரிகக் கோட்பாடுகளுக்கு இணங்கப் புன்முறுவல்
செய்தாலும் உள் மனதில் அவளைக் கிழித்து துர்காதேவி
மாதிரி சம்காரம் பண்ணிக் குடலை மாலை போட்டுக்
கொண்டேன். Dracula

அழகான, ஆசையான, அன்பான கணவன் இருப்பதால்
மற்ற சில்லரை அசௌகர்யங்களை காயத்ரி பொருட்
படுத்துவதில்லை.

காயத்ரி ராஜரத்னம்.

ராஜரத்னம் என்கிற பெயரிலேயே மயங்குகிறாள் ஒரு
மாது. ரத்னா கொஞ்சம் பெண்; கொஞ்சம் ஆண். அர்த்தநாரி
காலேஜ் டிராமாவில் பெண் வேஷம் போட்டிருக்கிறாராம்.
ஜிப்ஸி. ''என் உயரத்துக்கும் வளர்த்திக்கும் ஏற்ப இரண்டு
டென்னிஸ் பந்துகளுடன் முதல் காட்சியில் தோன்றினேன்
தாங்க முடியாத விஸில். பிரின்ஸிபால் வந்து சென்ஸார்
பண்ணிவிட்டார். இரண்டாம் காட்சியில் பூப்பந்துகள்.''

## 4

**ச**ந்தேகம் சந்தேகத்துக்கு ஆதாரம் கிடையாது. கருத்தும்
instinct-ம் சொல்கிறது. பாத்ரூமுக்குள் என்னை அறியாமல்
என் உடம்பு கூசுகிறது. பாடியவாறு உடம்பில் சோப்
தேய்த்துக் கொண்டே இருக்கிறேன். திடீர் என்று
மயிர்க்கால்களில் எல்லாம் உணர்கிறேன். யாரோ என்னைப்
பார்க்கிறார்கள். எங்கிருந்து? எப்படி? பாத்ரூம் கதவுக்கு
சாவி ஓட்டை எதுவும் கிடையாது. மேலே
வெண்டிலெட்டர் ஜன்னல் கண்ணாடிகள் எல்லாம் பால்
வெள்ளை, இருந்தும்... இருந்தும்...

## 5

அம்மாவிடமிருந்து கடிதம். 'பிரியமுள்ள யத்து' என்ற வார்த்தைகளைப் பார்த்துமே ஸில்லியாக அழுகை வந்தது. யத்து என்ற செல்லப் பெயரைக் கேட்டு எத்தனை நாளாகிவிட்டது! (அப்பா, 'எத்தூ' என்று ஊகாரம் சேர்த்துக் கொள்ளுவார். சாரங் 'எத்ஸ், என்பான். விஜி 'எத்தம்மா' என்பாள். அம்மாதான் 'யத்து' என்று சரியான வல்லின அழுத்தத்தில் கூப்பிடுவாள்) என்னிடமிருந்து கடிதமே இல்லையாம், அடிப்பாவி, எத்தனை லெட்டர் எழுதியிருக்கிறேன்? எல்லாவற்றையும் யார் சாப்பிட்டார்கள்?... பசு மாடு கன்று போட்டுவிட்டதாம். அம்மாவைப் பொறுத்தவரை பெண்களே கன்று போலத்தான். விஜிக்கு இப்போது நான்காவது மாசமாம். என் கல்யாணத்திற்குப் பிற்பாடு உடனே அழைத்துக் கொண்டு சென்றுவிட்டார்களாம். விஜிக்குப் பரவாயில்லை. மச்சினர்கள் எல்லாரும் தாங்கு தாங்கு என்று தாங்குவார்கள் எனக்கு ஏதும் விசேஷம் உண்டா? இரண்டு மாசத்திலா அம்மா! என்ன விளையாடுகிறாயா? Pressure cookerஆ have a heart. 'நான் அனுப்பி வைத்த மாகாளிக் கிழங்கு அரிசி அப்பளம், மாங்காய் எல்லாம் வந்து சேர்ந்திருக்கும் என எண்ணுகிறேன்.'

மாகாளியா! அப்பளமா! மாங்காயா! சரஸூவைக் கேட்டேன். ஏதோ ஒரு நாள் பார்ஸல் வந்தது. யாரோ காரியஸ்தான் கொண்டு வந்து கொடுத்தான். இந்த வீட்டிலே இல்லாத வடுமாங்காயா என்ன?''

எனக்குப் பற்றிக்கொண்டு வந்தது.

## 6

சந்தேகம் நம்பர் இரண்டு. அந்த லெட்டர் பிரிக்கப்பட்டு, படிக்கப்பட்டு, ஒட்டப்பட்டிருக்கிறது. ஒட்டின ஓரத்தைப் பார்த்தால் தெரிகிறது. எனவே

இங்கிருந்து போகிற லெட்டரும் சென்ஸார் ஆகிறது என்பதை எதிர்பார்க்கலாம்.

எனவே என் அடுத்த கடிதத்தை இப்படி ஆரம்பிக்கப் போகிறேன்!

'அன்புள்ள அம்மாவுக்கு, நான் இந்த கடிதத்தை எழுதுகிற தேதி இது...கடிதம் உனக்கு வந்து சேருகிற தேதியை எனக்கு எழுதவும். கடிதம் வந்து சேரவில்லை என்றாலும் உடனே தெரியப்படுத்தவும்.'

'Gayatri the brilliant'

## 7

**பா**த்ரூம் மர்மம் அவிழ்ந்துவிட்டது. பாத்ரூம் பக்கத்தில் ஒரு சின்ன இடம் இருக்கிறது. அழுக்குக் கூடை, கண்டா முண்டா சாமான்களுக்காக. நான் பாத்ரூமுக்குள் நுழைந்து ஷவரைத் திறந்துவிட்டுச் சளபுள என்று சப்த மிட்டுவிட்டுப் பாடிவிட்டு-ஒரு திருகாணி கழற்றவில்லை மெல்ல வெளியே வந்து கதவைச் சார்த்திவிட்டு அந்த இடத்தில் வந்து ஒளிந்து கொண்டுவிட்டேன். இரண்டே நிமிஷத்தில் யார் வருகிறார்கள்?

சரஸு!

மெல்ல வந்து கதவை நெருங்கி அதன் நடுமையத்தில் விரலால் தேடுகிறாள். அவள் தொட்டதில் கதவு திறந்து கொள்கிறது. திடுக்கிடுகிறாள். கஷ்டப்பட்டு சிரிப்பை அடக்கிக் கொள்கிறேன். ''காயத்ரி! காயத்ரி! உள்ளே இருக்கிறாயா?'' என்று கேட்டுவிட்டு வேகமாக அந்த இடத்தைவிட்டு வெளியேறுகிறாள்.

கதவின் நடுமையத்தில் கூர்ந்து பார்த்தால்...ஒரே ஓர் இடத்தில் சின்னச் சதுரமாகக் கோடு தெரிகிறது. அதை விரலால் தொட்டால் அந்த அளவுக்குக் கட்டை பெயர்ந்து கையோடு வருகிறது. ஒரு துவாரம் தெரிகிறது. சின்ன துவாரம். இங்கிருந்து பார்ப்பவர்களை அங்கிருந்து பார்க்க

முடியாது. This house is full of surprises. ரத்னாவிடம் காட்டவேண்டும்.

## 8

**சா**மிநாத அய்யர் பரிமாற நானும் சரஸுவும் மௌனமாகச் சாப்பிடுகிறோம்.

''அய்யர்'' என்கிறேன்.

''என்னம்மா?''

''தச்சன் யாரையாவது வரச் சொல்லுங்க.''

''சரியம்மா''.

''பாத்ரூம் கதவிலே ஓட்டை இருக்கிறது. அடைக்கணும்''

''சரியம்மா, வரச் சொல்கிறேன். முத்துகிட்டே சொல்கிறேன்.''

''ஓட்டை வழியாக ஜனங்கள் வேடிக்கை பார்க்கிறது, அய்யர்!''

சரஸுவிடம் மாறுதல் இல்லை. ''அப்படியா?''

சாமிநாத அய்யர் ஒரு ஜடம். விளக்கெண்ணெய் விழுங்கி. சமையல் நன்றாக இருக்கிறது என்றாலும், காலடியில் பாம்பு என்றாலும் ஒரே எக்ஸ்பிரஷன் தான்

''சில பேருக்கு இதில் எல்லாம் ஓர் ஆசை அய்யர்!''

சரஸு என்னை நிமிர்ந்து பார்த்துச் சிரித்து: ''பச்சடி சாப்பிடு. நன்றாக இருக்கிறது.''

## 9

**ர**த்னாவிடம் ராத்திரி எல்லாவற்றையும் விவரமாகச் சொன்னேன். ''என்னை அடிக்கடி தொடுகிறாள். பாத்ரூமில் எட்டிப் பார்க்கிறாள். எனக்கு வரும் கடிதத்தைப் படிக்கிறாள். நான் எழுதும் கடிதத்தைப் படிக்கிறாள்'' நான்

கொஞ்சம் பயந்து கொண்டேதான் இதைச் சொன்னேன். ரத்னா நிதானமாகக் கேட்டுவிட்டு, அந்தப் பொல்லாத புன்னகையுடன் என் தலையைத் தடவிக் கொடுத்து. ''காயத்ரி! you silly fool. நீ ஓர் அழகான முட்டாள்.'' என்கிறார். என்னைப் பிடித்து இழுத்து என்னை மார்போடு அணைத்துக் கொள்ள முயற்சி பண்ணுகிறார். ஒரே தள்ளு! ''காயத்ரி! யோசித்துப் பார். உனக்கு நிறைய Imagination இருக்கிறது. ஆனால் அது வக்கிரமாக சைடு அடிக்கிறது. பாத்ரூம் கதவில் அந்த ஓட்டையை நான்தான் வைத்தேன். பத்திரத்திற்காக. உள்ளே கெய்சர், அது, இது என்று எலக்ட்ரிகல் சாமான்கள் நிறைய இருக்கிறன. ஏதாவது உள்ளே விபத்து நிகழ்ந்தால், ஒன்று கிடக்க ஒன்று நடந்துவிட்டால் உள்ளே பார்க்க, கூப்பிடவே அந்த துவாரம்! இது எனக்கும் சரஸுக்கும் மட்டும் தான் தெரியும். உன்னிடம் சொல்ல வேண்டும் என்றிருந்தேன். உன் லெட்டர்களை ஒருவரும் பிரித்துப் பார்க்க மாட்டார்கள். அவர்களுக்கு அதற்கெல்லாம் அவகாசம் கிடையாது. உங்கள் வீட்டிலேயே பழைய கவர் ஏதாவது இருந்திருக்கும். அது சரியாக ஒட்டவில்லை என்று சோற்றுப் பசை போட்டு ஒட்டியிருப்பார்கள். அதைப் போய் நீ சரஸுவோ யாரோ பிரித்துப் படித்து ஒட்டியிருக்கிறார்கள் என்று நினைத்திருக்கிறாய்! உன் அம்மாவுக்கு வேண்டுமானால் எழுதிக்கேள். உனக்குச் சந்தேகமிருந்தால் நீ எழுதும் லெட்டர்களை உன் கைப்படத் தபால் பெட்டியில் போடு. யாரும் வேண்டாம் என்று சொல்லவில்லை Don't imagine things. நாங்கள் எல்லாம் கொஞ்சம் பெரிய இடம். இந்த மாதிரி கூட எண்ணிப் பார்க்க மாட்டோம். சரஸு உன்னைத் தொட்டால் அது வாஞ்சையினால், வாத்ஸல்யத்தினால் இருக்கும். இப்போது சமாதானமாயிற்றா?''

நான் நியூட்ரலாகத் தலையாட்டிகிறேன். அப்போது ரத்னா செய்த காரியம் என்னை மிகவும் வியப்பில் ஆழ்த்தியது (கொஞ்சம் விசனமும் கூட). ''சரஸு, சரஸு'' என்று

அவளையே கூப்பிடுகிறார். அவள் நைட் கவுன் சகிதம் கிளம்பி வருகிறாள்.

''காயத்ரி என்னமோ சந்தேகப்படுகிறாள், அவள் லெட்டரை நீ படிக்கிறாயாம். பாத்ரூமில் எட்டிப் பார்க்கிறாயாம். ஃபன்னியாக இல்லை?'' சரஸு என்னை இரக்கத்துடன் பார்த்து, ''காயத்ரி, சின்னவள். புதிதாக கல்யாணமானவள். அப்பா, அம்மாவை விட்டுத் தனியாக வந்த ஒரு பெண்ணின் மனது பெண்ணுக்குத் தான் தெரியும். காயத்ரி குழந்தை. அவளுக்கு என்ன தெரியும்? காயத்ரி மேல் எனக்குக் கோபம் இல்லை." etc., etc., all. rot பொன் மொழிகள். இரண்டு பேரும் சேர்ந்து என்னை அற்பமாகப் பண்ணிவிட்டார்கள். ஒரு வாரம் sulk பண்ணப் போகிறேன்.

பின்னிரவில் திரும்பிப் படுத்துக்கொண்டிருந்தவளைப் பலாத்காரமாகப் பிடித்து இழுத்தார். "I am not in a mood" என்றேன். கேட்கவில்லை. நான் எதிர்த்தேன். ''ரத்னா, நான் ஊருக்குப் போக வேண்டும்.'' என்றேன்.

''என்ன? வந்து மூன்று மாதம் கூட ஆகவில்லை!''

''இரண்டு நாள் இருந்துவிட்டு வந்துவிடுகிறேன், ஒரு மாறுதலுக்கு.''

''காலை அதைப்பற்றிப் பேசலாம்?''

''இல்லே. இப்பவே பேசலாம்''

''ஓகே. இரண்டு நாள்தானே, எப்பப் போகணும்?''

''பிராமிஸ்! ப்ராமிஸ்! பிராமிஸ் பண்ணினால்தான்!''

''டிக்கெட்டை வாங்கிக் கையில் கொடுத்தால் தான் மேலே கை வைக்கவிடுவாய் போலிருக்கறதே?''

''ஆமாம்'' என்றேன்.

ஒரு வாரம். டிக்கெட் வரவில்லை. ஒரு வாரம் நான் சரஸுடன் பேசவே இல்லை. என்னைப் பார்த்துச் சிரிப்பாள். நான் பதிலுக்குச் சிரிக்கமாட்டேன். அய்யர் வழியாக அல்லது அந்தப் பெண் வழியாகத்தான் பேச்சு எல்லாம்.

Gayatri the stubborn. இந்த நோட்டுப் புஸ்தகத்தைத் திருப்பிப் பார்த்தால், சரஸுவைப் பற்றித் தான் நிறைய எழுதியிருக்கிறேன். தேவையில்லை. அவளை முழுதும் நிராகரித்துவிடப் போகிறேன். அவள் யார்? நான் யார்? அவள் இந்த வீட்டில் ஒண்ட வந்தவள். நான் இந்த வீட்டு எஜமானி. அவள் கைம்பெண்! வீட்டை விட்டுப் போடி' என்ற சொல்ல எத்தனை நேரமாகும்?

அம்மாவுக்குப் பெரிசாக ஒரு லெட்டர் எழுதினேன் சரஸுவைப்பற்றி எல்லா விவரங்களும் கொடுத்து எழுதிக் கிழித்தெறிந்தேன். அம்மா ஏதாவது பிசகாக எடுத்துக் கொள்வாள். இந்த சரஸுவைத் தனியாகச் சமாளிக்க எனக்குத் தெரியவில்லையா என்ன? 'சரஸு, ஜாக்கிரதை! காயத்ரியை உனக்குத் தெரியாது'. ஊருக்குப் போக வேண்டும் என்கிற ஆசை மறைந்து விட்டது.

## 10

மறுபடி சரஸு இந்தத் தடவை சீரியஸ். பேனாவுக்கு மசி போட பாட்டிலைத் தேடினேன். இந்திராவைக் கூப்பிட்டேன். பதில் இல்லை. எல்லோரும் எங்கே ஒழிந்து விட்டார்கள்? மாடிக்குப் போனேன். சரஸுவின் ரூம் பூட்டியிருந்தது. ரூம் வாசலில் ஒரே ஒரு நகை கிடந்தது. சின்னக் காதோலை. அது கல் பதித்தது. இது எங்கே இங்கே கிடக்கிறது என்று யோசித்தேன். பக்கத்து ரூமில் சத்தம் கேட்டது.

## மூன்று

இம்மாதிரி ஒன்று இரண்டு மூன்று என்று அத்தியாயப் பாகுபாடெல்லாம் காயத்ரி செய்தது அல்ல. அந்த நோட்டுப் புத்தகம் தொடர்ந்தேர்த்தியாக எழுதி இருக்கிறது. அதை நான் பாகுபடுத்தி நம்பர் போட்டுத் தந்திருக்கிறேன்.

காயத்ரியின் புத்தகத்தை இதோ கையில் வைத்துக் கொண்டிருக்கிறேன். அவளைப் பார்க்க பஸ்ஸில் சென்று கொண்டிருக்கிறேன். மறுபடி படித்துக் கொண்டே

வருகிறேன். எத்தனை தடவை படித்திருப்பேன்! இருந்தும் இந்தப் பெண்ணின் வினோத வாக்கியங்களின் சுவாரசியம் குறையவில்லை. பக்கத்தில் மல்லிகைப் பூ வாசனை வருகிறது. பஸ் டிராஃபிக் விளக்குக்காகத் தயங்கி நிற்கிறது. பறை கொட்டி ஜோடித்து உட்கார வைத்த பிண ஊர்வலம் ஒன்றும் பச்சை விளக்குக்காக காத்திருக்கிறது. பஸ்ஸே வேடிக்கை பார்க்கிறது. நான் மட்டும் காயத்ரியைப் படித்துக்கொண்டிருக்கிறேன். காயத்ரியைச் சந்திக்கப் போகிறேன். காப்பாற்றப் போகிறேன்.... எப்படி என்பது தெரியவில்லை? இதயம் மூன்று செண்டி மீட்டர் வட்டத்திற்குப் பந்தாக சுருண்டு உள் நாக்கின் அருகில் வந்து அடைக்கிறது-ஏன்?

நீங்கள் காயத்ரியை முழுவதும் படிக்கவில்லை அல்லவா?

## 1

ரூமுக்குள் அய்யரின் கறுப்புப் பெண் (இந்திரா?) படுக்கையின் மையத்தில் உட்கார்ந்திருக்கிறாள். அய்யர் ஒரு சிகரெட் பிடித்துக்கொண்டு ஓரத்தில் நின்று கொண்டு அசுவாரசியமாகப் பார்த்துக் கொண்டிருக்க சரஸு தன் நகைகள் எல்லாவற்றையும் கறுப்பிக்கு ஒன்றொன்றாக அணிவித்துக் கொண்டிருக்கிறாள். காட்சி Surrealisic ஆக இருக்கிறது. சப்பணம் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருக் கிறாள். காதில் பச்சைக் கல்லில் லோலாக்கு. மூக்கில் இரண்டு பக்கமும் வைரம். கழுத்தில் இரட்டை வடம் சங்கிலி. காசு மாலை மற்றும் எத்தனை நகைகள்! பணக்கார வீட்டுப் பெண் பரத நாட்டிய அரங்கேற்றம் மாதிரி வங்கி, நாகொத்து, ஓலை, இழை, மோதிரம், கங்கணம்... வஸ்திரங்கள் எதுவும் அணிந்திருக்கவில்லை.

அய்யர் சிகரெட் பிடித்துக் கொண்டு ஒரே சீராகப் பார்த்துக் கொண்டிருக்க-

''சரஸு தொடாதே, சரஸு தொடாதே. குறுகுறு என்கிறது.''

''எழுந்து நில்லடி'' என்கிறாள் சரஸு, குரலில் அதட்டலுடன்.

''வேண்டாம் சரஸு வெட்கமாக இருக்கிறது'' என்கிறாள்.

''அம்மா சொன்னதைக் கேளு''! என்கிறார் அய்யர். தயங்குகிறாள். நிற்க மறுக்கிறாள். ''அய்யர் வாய்யா'' என்கிறாள் சரஸு, ஏதோ முனி பிடித்த மாதிரி உடம்பு பதறுகிறது. அய்யர் வந்து அந்த சிகரெட் நுனியை இந்திராவின் உடம்பில் அம்மை குத்துவதுபோல வைத்து அழுத்தி அவளை அலறவிடாமல் வாயைப் பொத்த அவள் உடம்பில் இரண்டு மூன்று இடத்தில் கன்னிப் போயிருக்கிறது;

அய்யர் அந்த சிகரெட்டுக்கு உயிர் இருக்கிறதா என்று இழுத்துப் பார்க்கிறார்.

உயரமாகப் படுக்கை நடுவில் நிற்கிறாள். சரஸு, தான் வரைந்த படத்தை ஓவியர் பார்ப்பது போல் பார்க்கிறாள்.

''ஒட்டியாணத்தை எடு அய்யர்'' என்கிறாள்.

## 2

எனக்கு மூச்சடைக்கிறது, ஒன்றும் புரியமால் திக்கு திக்கு என்கிறது. என் தைரியம் எல்லாம் கரைந்து போய் நேராக வந்து ரூமுக்குள் கதவைச் சாத்திக்கொண்டு படுத்துவிட்டேன். கொஞ்சநேரம் கழித்துப் படபடப்பு அடங்கினதும் யோசிக்க வேண்டும். பெரிசு பெரிசாக மூச்சு விடுகிறேன். தண்ணீரை மடக்கு மடக்கு என்று குடிக்கிறேன். ரத்னாவுக்கு டெலிபோன் செய்கிறேன். ரத்னா எடுத்து, ''ஹலோ...ஹலோ'' என்கிறார். எனக்குப் பேச வரவில்லை. பேச்சு எழவில்லை.

யார் இவர்கள்? எந்த மாதிரி இடம் இது? வெளி உலகத்திற்கு எஜமானி, சமையற்காரன் பெண்ணுக்குத் தன் சகல நகைகளையும் அணிவித்து ஜோடிக்கிறாள். சமையற்கரான் சிகரெட்டை வைத்து பெண்ணின் உடம்பில் அழுத்துகிறான். What kind of perversion is this? அதைவிட ஆச்சரியம் அப்புறம் நடந்தது தான்...

நான் அறையில் படுத்திருக்கிறேன். கதவு தட்டப்படும் சப்தம். திடுக்கிடுகிறேன்; தயங்குகிறேன்; திறக்கிறேன். அந்தப் பெண் இந்திரா நிற்கிறது.

''காயத்ரி அம்மா, நீங்க வந்துட்டிங்களா?''

கிட்ட வருகிறாள். நான் சுருங்குகிறேன். அவளைப் பார்க்கிறேன். அவள் உடலைப் பார்க்கிறேன். எப்போதும் போல்தான் துவைத்த பாவாடை, தாவணி, கையில் ப்ளாஸ் டிக் வளையல், காதில் ஈர்க்குச்சி, வளைந்து சரிந்து வெட்டிய ரவிக்கை-சற்று நேரம் முன்னே எத்தனை நகைகள்-

''காப்பி கொண்டாரட்டுமா? காயத்ரி அம்மா?''

'கொண்டாரட்டுமா?'' - சத்தியமாக அய்யரின் பெண்ணில்லை அவள், பெற்ற தகப்பன் இப்படிச் செய்வானா? பின் யார் இவர்கள்?

''இந்திரா, சரஸு எங்கே?''

''தெரியலை. காலையில கார் எடுத்துகிட்டுப் போனாங்க... இன்னும் வரவில்லை. தோப்புக்குப் போயிருக்காங்களோ என்னவோ!''

பொய். பத்து நிமிஷத்திற்கு முன்னால் பார்த்தேன்.

''அய்யர் எங்கே? என்றேன்.

''அப்பாவா? மார்க்கெட்டுக்குப் போயிருக்காங்க''

அப்பாவாம்!

அவள் சிகரெட் சுட்ட இடத்தைத் தடவிக் கொடுக்கிறாள்.

## 3

படபடப்பு அடங்கியதும் மாலை நிதானமாக யோசித்தேன். தீர்மானித்தேன். இந்த வீட்டில் நான் இனி ஒரு க்ஷணம்கூடத் தங்கமாட்டேன். நான் இங்கு பார்த்ததை ரத்னாவிடம் சொல்லலாமா, கூடாதா என்று மிகவும் கடுமையாக யோசித்துக் கடைசியில், ரத்னாவிடம் சொல்லித் தான் ஆக வேண்டும் என்று முடிவு பண்ணிவிட்டேன். இந்தச் சம்பவத்தை மனதில் வைத்துக்கொண்டு முழுங்க முடியாமல், சீரணிக்க முடியாமல், தவித்துக்கொண்டிருக்க முடியாது. எனக்கும் ரத்னாவுக்கும் No Nonsense ரகசியங்கள் கூடாது. ஒளிவு மறைவு கூடாது. சொல்லிவிடப் போகிறேன்.

மூன்று ஜென்மங்களையும் வீட்டைவிட்டு விரட்ட வேண்டும். சமையற்காரன் சமையற்காரனாக இல்லாமல் -சே! இது நடக்கவே நடக்காது. எத்தனை சுதந்திரமாக சரஸுவின் முன் சிகரெட் பிடிக்கிறான். முன்னால் வரவே தயங்குவான். பூணூலையும் மாட்டிக் கொண்டு புஸ்ஸு புஸ்ஸு என்று புகைத்து அந்தப் பெண்ணின் உடம்பில்... அவள் யார்? அவளுக்கு நகை போட்டு ஜோடித்து பார்ப்பதில் சரஸுவுக்கு என்ன குரூர ஆசை? எனக்குப்புரியவில்லை. புரிகிறதோ புரியவில்லையோ, இந்த gang ஐ விரட்டவேண்டும். இல்லையென்றால் நானும் ரத்னாவும் தனியாக ஒரு சின்ன வீட்டுக்குச் சென்றுவிட வேண்டும் எனக்கு இந்த வீடு பிடிக்கவில்லை. Too much of mysteries.

சரஸு எனக்கு நகை போட்டு ஜோடிக்கப் போகிறளா? உடம்பில் சுரீர் என்கிறது.

## 4

ரத்னா வருவதற்கு ராத்திரி ஏழு மணியாயிற்று. வந்த உடன், ''சரஸு வந்தாச்சா?'' என்று கேட்டார். தெரியாது என்றேன், டிபன் சாப்பிட்டு விட்டுச் செய்தித்தாள்

நான்போய், ''ரத்னா, உங்களிடம் ஒரு மிக முக்கியமான விஷயம் பற்றிப்பேசவேண்டும்'' என்றேன்

''மறுபடியுமா! சரஸுவைப் பற்றி கம்ப்ளெய்ண்ட்டா.'' என்றார்.

''கம்ப்ளெய்ட் ஒன்றுமே இல்லை. நான் இன்று பார்த்த ஒரு காட்சியைச் சொல்கிறேன். அவ்வளவுதான்'' என்றேன்

''ராத்திரி வைத்துக்கொள்ளலாமே!'' என்றார்

''இல்லை, இப்போதே சொல்லியாகவேண்டும்''

''சரி சொல்லு, சொல்லு''

விவரித்தேன், ஒன்றுவிடாமல் விவரித்தேன்.

நிதானமாகக் கேட்டுக்கொண்டிருந்தார். நியூஸ் பேப்பரை மடக்கி வைத்தார். ''காயத்ரி, கொஞ்சம் இப்படி வா'' என்றார். நான் அருகில் சென்றேன். நெஞ்சைத் தொட்டுப் பார்த்து, ''ஜுரமா?'' என்கிறார்.

''இல்லை, ஏன்?''

''ஏன் இப்படிப்பிதற்றுகிறாய்?''

''நான் பார்த்தது, பிதற்றலா?''

''பார்த்தாயா? என்ன விளையாடுகிறாய்-சரஸு இன்று காலையிலிருந்து வீட்டில் இல்லை. நான்தான் அவளை அனுப்பி வைத்தேன். இருபத்து ஐந்து மைல் காரில் போயிருக்கிறாள். தோப்புக்கு, அங்கே அவள் சொத்து விஷயமாக வக்கீலைப் பார்த்துப் பேசிவிட்டு இன்னும் வீட்டுக்குக் கூட வரவில்லை. என்ன உளறுகிறாய். சரஸுவாவது வீட்டில் இருப்பதாவது? -''

எனக்கு முதல் ஸ்தம்பிதம்.

''அப்புறம் கேள். போன வாரம்தான் சரஸு தன் நகைகள் அத்தனையும் கொண்டுபோய் பாங்க்ல ஸேஃப் டிபாஸிட் வால்ட்டில் வைத்திருக்கிறாள்-''

இரண்டாவது ஸ்தம்பிதம்.

''காயத்ரி! உனக்கு உடம்பு சரியில்லையா?'' நான் பார்த்தேன். ரத்னாவின் முகத்தில் கவலை ததும்பியது. ''ஏன் காயத்ரி! Why do you imagine things? போன தடவை 'சரஸு பாத்ரூமில் எட்டிப் பார்க்கிறாள்' என்றாய். இந்தத் தடவை வரம்பு மீறி என்ன என்னவோ சொல்கிறாய். சரஸுவைக் கண்டால் உனக்கு பிடிக்கவில்லையா? அவளை ஏன் இவ்வளவு வெறுக்கிறாய்? அவள் உன் வம்புக்கு வந்தாளா? அவள் ஒருவிதவை. சமீபத்தில் கணவனை இழந்தவள். துக்கம் நிறைந்தவள். அனுதாபம் காட்ட வேண்டியவள். அவளை ஏன் வெறுக்கிறாய்?'' பகுத்தறிவு அது இது என்று ரத்னா பேசினார். எனக்கு பற்றிக் கொண்டு வந்தது.

''இப்பொழுது நான் சொல்வது பொய் என்கிறீர்களா?''

''பொய் இல்லை. கற்பனை காயத்ரி! சைக்காலஜி படி நீ அவள் மேல் இருக்கும் அதீத வெறுப்புக்களைக் கற்பனைக் காட்சிகளாக மாற்றி அதை ஏறக்குறைய நம்புகிறாய். Your are jealous of her."

கார் சப்தம் கேட்கிறது. டிரைவர் பிரப்பங் கூடையையும் ஃப்ளாஸ்கையும் தூக்கி வருகிறான். பின்னால் சரஸு களைப்புடன் இறங்கி வருகிறாள்.

''ஹலோ காயத்ரி! ஹலோ ரத்னா? அப்பாடா? ராட்டன் ஜர்னி! மோசமான ரோடு!''

நான் அவளையே பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

ரத்னா : சரஸு, நீ மத்தியானம் வீட்டுக்குத் திரும்பி வந்தாயா?

சரஸு : இல்லையே, ஏன்?

ரத்னா : உன் நகைகள் எல்லாம் எங்கே?

சரஸு : எல்லாம் பாங்க்கில் இருக்கிறது. ஏன்?

ரத்னா என்னைப் பார்க்கிறார்.

சரஸு : என்ன... காயத்ரி, மறுபடி ஏதாவது ஆரம்பிக்கப் போகிறாயா?

''முடிக்கப் போகிறேன்,'' என்று சொல்லிவிட்டு எழுந்து வந்துவிட்டேன்.

ரத்னா குருடாக இருக்கிறார். அவருக்கு நேரில் வைத்து மூதிரிக்க வேண்டும். அப்போதுதான் அவருக்குப் புரியும். அக்கா ஒரு தேவதை என்று எண்ணம். காயத்ரி சரஸுவை ஒழித்துக்கட்டத் தீர்மானித்து விட்டாள். முதல் படலம்... Sulk, ரத்னாவைக் கிட்ட அண்டவிடாதே... இன்றிலிருந்து இன்றிலிருந்து..

## 5

ஒரு வாரம் சமாளித்து விட்டேன். ரத்னா நிச்சயமாகவே தவிக்கிறார். காயத்ரி மரக்கட்டை என்றால் மரக்கட்டைதான். உதடுகளை அப்படியே 'ப்' என்று வைத்துக் கொண்டு.

''உனக்கு என்னதான் வேண்டும்? ஏன் இப்படி என்னை Tease பண்ணுகிறாய்?''

''இன்னும் ஒரு மாசத்தில் சரஸ்வதி இந்த வீட்டை விட்டு வெளியேற வேண்டும்?''

''ஏன், அவள் எங்கே போவாள்?''

''எத்தனையோ ஹோட்டல் இருக்கிறது. அய்யர், அந்தப் பெண், சரஸ்வதி மூன்று பேரும் ஒரே மாசத்துக்குள் out" என்றேன்.

ரத்னா கையைப் பிசைந்து கொள்கிறார்.

''இல்லை, நானும் நீங்களும் இந்தப் பாடாவதி வீட்டை விட்டு வெளியே செல்ல வேண்டும். சரஸு தன் நகைகளை கண்ட கழிசடைகளுக்குப் போட்டுக் கொண்டு சமையற்காரனை வைத்துக் கொண்டு நிம்மதியாக இருக்கட்டும்.''

''மறுபடி மறுபடி அதையே ஆரம்பிக்கிறாய்.''

''நான் பார்த்தேன்! என் முட்டாள் கணவனே பார்த்தேன்.''

## 6

**ரா**த்திரி பட்டென்று விளக்குப் போட்டு சளக் சளக் என்று தண்ணீர் குடித்துவிட்டு என்னைப் புரட்டுகிறார் ரத்னா.

''காயத்ரி! நீ சொல்றதைக் கேட்கிறேன். இது நம் வீடு. சரஸ்வதியை இந்த வீட்டை வீட்டு வெளியே போகச் சொல்லி விடலாம். ஒரு மாதத்திற்குள். வா...!''

''நிஜமாகவா''

''சத்தியமாக வா''

அவர் கை என் மேல் அலைகிறது. நான் கொஞ்சம் தளர்கிறேன். ஒருவாரம் தேக்கப்பட்டிருந்த உற்சாகம்.

''எனக்கு வெட்கமாக இருக்கிறது.''

''உனக்கு வெட்கமாக இருந்தால் கண்ணை மூடிக் கொண்டு விடு!''

ஷேவ் பண்ணாத முகம் குத்துகிறது. நெஞ்சை அழுத்துகிறது. வியர்வைத் துளிகள் புருவத்தின் அருகில் அரும்ப... எனக்குத் திடீர் என்று மயிர்க்கால்கள் எல்லாவற்றிலும் அந்த உணர்ச்சி, அந்த வெட்கம் உறுத்துகிறது. யாரோ பார்க்கிறார்கள்! யாரோ பார்க்கிறார்கள்! ரத்னாவைத் தள்ளப் பார்க்கிறேன்.

எதிரே திரை அசைகிறது. அப்படியே என் வெட்கத்தை மறந்து படுக்கையை விட்டு எழுந்து ஓடிபோய்த் திரையை விலக்குகிறேன்.

சரஸு வெளியே நிற்கிறாள்!

# 7

ரத்னா நிஜமாகவே அதிர்ந்து விட்டார்!

''என்ன சரஸு இது!''

''பாருங்கள், உங்கள் அக்காவின் பண்பை! எவ்வளவு perverted Lady என்பது இப்போதாவது உங்களுக்குத் தெரிகிறதா? இவள் விபரீத ஆசையைப் பாருங்கள் திரைக்குப் பின்னால் ஒளிந்திருந்து... சே!''

''என்ன சரஸு இது?''

I become hysteric

''என்ன சரஸு இது?''

''தூக்கம் வரவில்லை. பத்திரிக்கை பார்க்கலாம் என்று'' என்று மழுப்புகிறாள்!

''சே! நீ இப்படி நடந்து கொள்வாய் என்று நான் கனவிலும் எதிர்பார்க்கவில்லை. என்ன சரஸு இது, அவள் சொன்னதெல்லாம் நிஜம் போலிருக்கிறதே?''

திருதிரு வென்று விழிக்கிறாள்.

''நாளைக்கு காலை! ஆம்! நாளைக்குக் காலை சரஸு இந்த வீட்டை விட்டு வெளியே போக வேண்டும்'' என்கிறேன்.

ரத்னா சற்றுத் தயங்குகிறார்... பின்பு தீர்மானமான குரலில்... ''சரஸு! நீ கொஞ்ச நாள் எங்களை விட்டு விலகியிருப்பது நல்லதென்றே தோன்றுகிறது.''

''கொஞ்சநாள் என்ன எப்போதுமே! எப்போதுமே!'' என்கிறேன்.

''நீ நாளையே வீட்டை விட்டுப் போய்விடு சரஸு!'' என்கிறார்.

ராட்சசி! ஒரு வார்த்தைகூட வரவில்லை. உம்மென்று இருக்கிறாள். ஏதாவது கையில் கண்டதை எடுத்து அடிக்கலாம் போல் வருகிறது....

''பொழுது விடிந்ததும் புறப்பட வேண்டும்! காப்பிக்கூட கிடையாது'' என்றேன்.

சரஸு ரத்னாவை முறைத்துப் பார்த்துவிட்டு செல்கிறாள்.

8

ராத்திரி மூன்று மணியிருக்கும். சொப்பனத்திலிருந்து விழித்துக்கொண்டு விடுகிறேன். பக்கத்தில் ரத்னாவைத் தொட்டுப் பார்க்கிறேன். ரத்னாவைக் காணோம்...

பேச்சுக்குரல் கேட்கிறது.

## நான்கு

அவள் கையெழுத்து கொஞ்சம் கொஞ்சமாக அவசரம் காண்பித்து மோசமாகும் பக்கங்கள் இனி.

1

சரஸு அறையில்தான் அந்தக் குரல்கள் கேட்கின்றன. ரத்னாவின் குரல் கேட்கிறது. முன் ராத்திரி நடந்த நிகழ்ச்சிக்காக சரஸுவைத் திட்டிக்கொண்டிருக்கிறாள் என்று எதிர்ப்பார்த்து அருகே செல்கிறேன். எட்டிப்பார்கிறேன். நல்ல வேளை, உள்ளே நுழையவில்லை. சரஸு படுக்கையில் உட்கார்ந்திருக்க, ரத்னா ஏறக்குறைய அவள் மடியில் படுக்காத குறை! வெறும் அண்டர்வேரை மட்டும் போட்டுக்கொண்டு படுத்திருக்கிறார். இந்திரா ரத்னாவுக்குக் கால் பிடித்து விடுகிறாள். பக்கத்தில் அய்யர் ஒரு கண்ணாடி டம்ளரில் மஞ்சளாக ஏதோ கலந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்.

அவர்கள் பேசுவது மெதுவான குரலில் இருந்தும் தெளிவாகக் கேட்கிறது.

''...ம்ப அடம் பிடிக்கிறாள். என்ன செய்யலாம்?', ரத்னா.

''ரத்னா. உனக்கு உடம்பு எல்லாம் இப்படித்தான் மயிர் வளர்ந்திருக்குமா?'' இந்திரா.

''பார்த்ததில்லை? சொல்லு பார்த்ததில்லை?''

''ம்ஹூம்...சத்தியமாக நான் கண்ணை மூடிக்கொண்டு விடுவேன்''.

எனக்குத் திடும் திடும் என்று இதயம் வெடிக்கிறது.

''இன்னும் வேலை பாக்கி இருக்கிறது. இப்போ இவளைத் துரத்திவிட்டால் தொடர்ச்சி போய்விடும்.''

''நாளைக்கே சரஸு வீட்டை விட்டுப் போக வேண்டும் என்று சொல்கிறதே!''.

''இந்த வீடு யாருது என்று சொன்னாயா?''

''இல்லை சரஸு.''

''உனக்கு யார் சோறு போடுகிறார்கள் என்று சொன்னாயா?''

''இல்லை சரஸு.''

''ஒரு பெண் வந்து என்னை என் வீட்டைவிட்டு வெளியே போ என்கிறாள். கேட்டுக்கொண்டிருந்துவிட்டு அதட்டுகிறயே!''

''என்ன சரஸு இது! உனக்கு தெரியாதா, எல்லாம் விளையாட்டு என்று.''

"அவளைச் செருப்பால் அடிக்க வேண்டாம்?''

''அடிக்கலாம்.''

''எனக்கு முன்னால் அடித்துக் காட்ட வேண்டும்.''

''நான் அடிக்கிறேனே.'' இந்திரா.

''காரியம் முடிய வேண்டுமே? எவ்வளவு பணம் விரயமாகிவிடும்!'' என்கிறது அய்யர்.

''அதற்காகத்தான் இந்தக் கழிசடயைப் பொறுத்துக் கொண்டிருக்கிறோம்.''

''எல்லாவற்றையும் திருப்பிச் செய்ய என்னால் ஆகாது அதுவும் approval ஆகிவிட்ட பிற்பாடு'' அய்யர்.

''நான் வருகிறேனே! காயத்ரிக்குப் பதில்.''

''ஷட்அப். உன்னைப் பார்த்துப் பார்த்து அலுத்து விட்டது கருப்பு நாயே!''

தக்கத்தை. தையத்தை என்று இரண்டு பரதநாட்டிய முத்திரைகள் செய்து விட்டு, இந்திரா சிரிக்கிறது.

''நான் சொல்றதைக் கேள் ரத்னா. கொஞ்சம் கொஞ்சமாக ஆரம்பித்து விடவேண்டியதுதான்.'' என்கிறாள் சரஸு.

''செத்துக் கித்து விடப் போகிறது. ஒன்று கிடக்க ஒன்று ஆகிவிடப் போகிறது. நிர்மலா மாதிரி!''

''ரொம்பக் குறைவாக ஆரம்பித்து பார்க்கலாம். என்ன அய்யர்?''

''சரி, நாளைக் காலை ஆரம்பித்து விடுகிறேன்.''

''கதவுப் பக்கம் ஓசை கேட்கிறது. கொஞ்சம் இரு!'

நான் பறந்தடித்துக் கொண்டு ஓடிவந்து படுக்கையில் விழுகிறேன்.

''காயத்ரி! காயத்ரி'' என்று கீழேயிருந்து குரல் கேட்கிறது. மூச்சை அடக்கிக் கொள்கிறேன். பயம் ஒரு சுமைபோல் மார்பு முழுவதும் வயிற்றில், உடம்பில் இறங்கி இருக்கிறது. பாவிகளா! பாவிகளா! இந்த வீட்டில் என்ன நடக்கிறது?

மூச்சு சற்று சமனமானதும் நிதானித்து நான் கண்டதையும் கேட்டதையும் யோசித்துப் பார்க்கிறேன், சில விஷயங்கள் குழப்புகின்றன.

1. இந்தப் பாவிகள் எல்லோரும் ஒரே கட்சி!

2. என்னை என்னவோ செய்து இருக்கிறார்கள். என்னவோ செய்யப் போகிறார்கள். நாளை என்னவோ ஆரம்பிக்கப்போகிறார்கள்.

3. அதற்குள் நான் ஏதாவது செய்தாக வேண்டும் இந்த வீட்டை விட்டு ஓழிய வேண்டும்.

யார் அவர்கள்? ராட்சச ஜன்மங்களா? ரத்னா! ரத்னாதான் எனக்கு மிகப் பெரிய அதிர்ச்சி! வீடு உன்னுடையது இல்லையா? சம்பாத்தியம் உன்னுடையது இல்லையா? அவள் உன் அக்காவா? அவள் மடியில் படுத்திருக்கிறாயே! அன்பில்லாத கணவனே! என் அப்பாவை ஏமாற்றினீர்களே! அப்பாவி அப்பா! சரியா விசாரித்துக் கொண்டு என்னை கொடுக்கக்கூடாதா! இப்படி இங்கே கொண்டு தள்ளி விட்டீர்களே! கணவன். விதவை அக்கா, சமையற்காரார், சமையற்காரர் பெண்.... அவர்கள் எல்லாம் பிரத்தியோகமாக என் முன் நடத்தப்படும் நாடகத்தின் பாத்திரங்களா! உண்மையில் இவர்கள் யார்? இவர்களுக்குள் என்ன உறவு? கடவுளே எனக்கு புரியவில்லையே!

## 2

ரத்னா திரும்பி வந்து படுத்து என்னைத் தொட்டுப் பார்க்கிறார். என் உடல் கூசுகிறது. பட்டென்று விளக்கைப் போடுகிறார். கண்களுக்குள் ஊசி குத்துகிறது. ''காயத்ரி! காயத்ரி!'' என்று என்னை உலுக்கி எழுப்புகிறார் ரத்னா. நான் தூக்கத்திலிருந்து கலைந்தது போல் எழுந்திருக்கிறேன். என் நாடகமும் ஆரம்பித்தாகி விட்டது!

''ஒரே ஒரு வாரம் பொறுத்துக் கொண்டிரு... சரஸு வேறு வீடு பார்த்துக்கொண்டு போய் விடுவாள். அவள் ரொம்ப அழுதாள். என்ன செய்வது? புருஷன் இல்லாதவள்... வயது நாற்பதுகூட ஆகவில்லை. அவளுக்கு உணர்ச்சிகள் கிடையாதா என்ன! நீயும் நானும்தான்

இனிமேல் இந்த வீட்டில். ஒரே ஒரு வாரம் பொறுத்துக்கொள் என் கண்ணில்லையா?''

என்னைப் புரட்டி, சட்டையைக் கழற்ற ஆரம்பிக்கிறார். எனக்கு அழுகை, பிரவாகமாக வருகிறது. அந்தக் கயவனின் விரல்கள் என்மேல் நடனம் ஆடுகின்றன. நான் விசித்து விசித்து அழுகிறேன். உடம்பை அப்படியே silk worm போலச் சுருட்டிக் கொள்கிறேன்.

"ரத்னா! என்னை ஒரே ஒரு ராத்திரி தனியாக விட்டுவிடு. ப்ளீஸ்... ப்ளீஸ்'' என்று திரும்பத் திரும்பச் சொல்கிறேன்...

விட்டு விடுகிறான்.

நான் ஒருத்தி, இவர்கள் நான்கு பேரையும் எப்படிச் சமாளிக்கப் போகிறேன்? எதிரிகளின் நிஜ ரூபம் தெரியவில்லை.

'செத்துக் கித்து விடப் போகிறது!''

''ரொம்பக் குறைவாக ஆரம்பித்துப் பார்க்கலாம்''

அய்யர் கொடுப்பது எதையும் சாப்பிடாதே! இந்த வீட்டை விட்டு வெளியே போகிற வரைக்கும் தண்ணீர்கூடக் குடிப்பதில்லை.

காயத்ரி ராட்சசர்கள் வீட்டில் வாழ்க்கைப்பட்டு விட்டாள். வஞ்சிக்கப்பட்டு விட்டாள். ஒருநாள் தங்கமாட்டேன். கோயம்புத்தூருக்கு ஓடி விடப் போகிறேன், பொழுது விடிந்ததும், என்று தூங்காமல், தூங்காமல், தூங்காமல், வெளிச்சம் வரக் காத்திருந்தேன்.

என் உடம்பெல்லாம் criss cross ஆக சன்னமான ஊசிகள் ஜாக்கிரதையாகக் குத்திக்கொண்டிருக்கிறாள் சரஸு. ''இதுதான் கடைசி ஊசி, வைர ஊசி! வலிக்கவே வலிக்காது. இதை எங்கே குத்தப்போகிறேன் தெரியுமா? எழுந்து நில்!'' 'வேண்டாம் வேண்டாம்' என்று மௌனமாக அலறுகிறேன். விழித்துக்கொண்டேன். எதிரே அய்யர்

மிகவும் பவ்யமாகக் காத்திருக்கிறார். ''காப்பி சாப்பிடுங்க. சின்னம்மா!'' என்கிறார். எவ்வளவு சாந்தம்! எவ்வளவு வேலைக்காரத்தனம்! மேஜையைத் தன் துண்டால் துடைத்து ஆவி பறக்க அதை ஆற்றி....உயர்தரமான நடிகர்கள்.

''வைத்துவிட்டுப் போங்கோ அய்யர். நான் சாப்பிட்டுக் கொள்கிறேன்.''

''ஆறிப் போயிடுத்து...''

''பரவாயில்லை. பல் தேய்ச்சுட்டு சாப்பிடுகிறேன்.''

''அப்ப இருக்கட்டுமா? ''

''வேண்டாம், போகலாம்!''

''உங்க இஷ்டம்.''

காப்பியை sinkல் கொட்டினேன். மூஞ்சியை அலம்பிக் கொண்டேன். புடவையை மாற்றிக் கொண்டேன். என் பர்ஸில் நாற்பது ரூபாய் பணம் இருந்தது. அதை எடுத்து மாரில் செருகிக் கொண்டேன். பேனா ஒன்று குத்திக் கொண்டேன். கிளம்பினேன். ரத்னா இன்னும் தூங்கிக்கொண்டிருந்தான்.

அய்யர் சப்தம் சமையலறையில் கேட்டது! மரப்படியில் மெல்ல நிதானமாக இறங்கினேன். அவர்கள் எல்லோரும் ஒன்பது மணிவரை தூங்குவார்கள். காலையில் பட்சிகள் மட்டும்தான் சப்தம். மெதுவாக மர நிழல்களில் ஒதுங்கி ஒதுங்கி அந்த வட்ட வடிவமான பாதையைத் தாண்டி வாசல் கேட்டுக்கு வந்துவிட்டேன். கூர்க்கா நின்று கொண்டிருந்தான். அவனைப் பார்த்து சிரித்தேன். நீ கூட உண்டா?

''மேம் ஸாப் இத்னி ஜல்தி!''

''சும்மா வாக் போகிறேன்," என்றேன்.

தெருக்கோடி வரை மெதுவாக நடந்தேன். முதலில் அப்பாவுக்கு டெலிபோன் செய்ய வேண்டும். இல்லை தந்தி அடித்துவிட வேண்டும். டெலிகிராப் ஆபிஸ் எங்கே

இருக்கிறது? ஏதோ ஒரு இடத்தில் இருபத்து நாலு மணிநேரமும் திறந்திருக்குமே! எங்கே அது?

அதுவரை நடந்தே சென்றிராத அந்தத் தெருக்கள் எல்லாம் எனக்கு Strange ஆக இருக்கிறது. யாரையோ விசாரிக்கிறேன். தந்தி ஆபீஸ் எங்கே என்று! தந்தி ஆபிசில் அந்த ஆள் உள்ளேயிருந்து வர, தந்தி பாரம் கேட்டு அதை வாங்கி அதில் எழுத ஆரம்பிப்பதற்கும் வாசலில் கார் கதவு சாத்தப்படுவதற்கும் சரியாக இருந்தது. பைஜாமாவைப் போட்டுக் கொண்டு ரத்னா! ''கூர்க்கா சொன்னான். எங்கேயோ அவசரமாகப் போனாய் என்று. எனக்கு கவலையாகிவிட்டது. என்ன? தந்தி? யாருக்கு?''

''அப்பாவுக்கு.''

"எதற்கு? இப்படிக் கொடு. தந்தி வேண்டாம்'' டிரங்க்கால் போட்டுப் பேசலாம்.''

''எனக்கு உடனே அப்பாவை வரவழைத்தாக வேண்டும்..."

''வரவழைத்தால் போயிற்று. சின்ன விஷயத்துக் கெல்லாம் பெரியவரை டிஸ்டர்ப்பண்ண வேண்டுமா? நீ முதலில் வீட்டுக்குவா. அப்புறம் பேசிக்கொள்ளலாம்''

ரத்னாவின் கை என் மேல் அழுத்தமாகப் பற்றியிருந்தது. தந்தி கிளார்க் என்னை ஒரு மாதிரியாகப் பார்க்க, ''ஒன்றுமில்லை சின்ன மனஸ்தாபம்'' என்கிறான். என்னை ஏறக்குறைய இழுத்துக் கொண்டு, பலி ஆடு போல் செல்கிறேன்.

## 3

இந்த வீடு எப்படிப்பட்ட சிறை என்பதை இப்போது தான் உணர்ந்துகொள்கிறேன். கருங்கல் சுவர் கண்ணாடி பதித்த காம்பவுண்டுச் சுவரை என் போலப் பெண்கள் எகிறிக் குதிக்க முடியாது. வாசல் கதவு வழியாகத்தான் செல்ல வேண்டும். எப்போதும் கூர்க்கா நிற்கிறான்.

விசுவாசமாக உடனே ரிப்போர்ட் செய்துவிடுவான். உடனே காரை எடுத்துக்கொண்டு டிரைவரோ, இல்லை ரத்னாவோ வந்து விடுவார்கள் என்னால் இந்த வாசல் வழியாக தப்பிக்க முடியாது. இரண்டு நாளாக, ரத்னா வீட்டிலேயே இருக்கிறார். ''ரத்னா உனக்கு ஆபிஸ் கிடையாதா?''

''ஆபிஸ் கிடக்கிறது. உன்னுடனேயே இருக்கப் போகிறேன். உன் மனசு ரொம்பக் கலங்கி இருக்கிறது அல்லவா?''

இரண்டு நாட்களாக கோயமுத்தூருக்கு டிரங்க்கால் அடிக்கிறார். லைன் கிடைக்கவே இல்லையாம். பொய்!

இருந்தும் இவர்கள் சந்தேகப்படும்படியாக நான் நடந்துக்கொள்ளக்கூடாது. இவர்கள் அசந்திருக்கும் சமயத்தில்தான் என்னால் தப்பிக்க முடியும். நாள் முழுவதும் வாசல் கேட்டைக் கண்காணிக்க வேண்டும். ஒரு பத்து நிமிடம் கூர்க்கா டீ குடிக்கப் போகமாட்டானா! நாள் முழுவதும் என் ரூம் ஜன்னலிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தேன்.

மத்தியானம் இரண்டு மணி சுமாருக்கு அவன் அந்த கூண்டை விட்டுவிலகி மெதுவாகத் தெருவில் நடந்து செல்வது தெரிந்தது. அதுதான் சமயம் என்று மொட்டை மாடிக்குச் சென்று பின் பக்கத்து இரும்புப் படி வழியாக இறங்கி ஏறக்குறைய வாசல் பக்கம் வந்து விட்டேன். பாழாய் போகிற கூர்க்கா பீடி பற்ற வைத்துக்கொண்டு திரும்பி வேகமாக வந்து கொண்டிருக்கிறான். அந்த இடத்திலேயே அடுத்த சந்தர்ப்பம் வரும் வரை மறைந்திருக்கத் தீர்மானித்து ஓரத்தில் அவுட் ஹவுஸின் பின்னால் போய் ஒளிந்து கொண்டேன். வந்ததிலிருந்து இந்த அவுட் ஹவுஸை உள்ளே போய்ப் பார்த்ததில்லை. இதில்தான் அய்யரும் அந்தப் பெண்ணும் இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அவுட் ஹவுஸ் குப்பையாக இருந்தது. நீளமாக ஓடு போட்டு மூன்று ரூம்கள் இருக்கும். அதில் ஒன்றின் வாசலில்

கோலம் போட்டிருந்தது. ஒன்று பூட்டியிருந்தது. அந்த ரூமில் எட்டிப் பார்த்தேன். என் ரத்தம் உறைந்தது. ஒரு பெண் தரையில் உட்கார்ந்திருந்தாள். தலையில் அப்படிப்பட்ட தூசி. ரவிக்கை புடவை எல்லாம் கிழிந்திருந்தது. பக்கத்தில் ஒரு அலுமினியத் தட்டு வைத்திருந்தது. எனக்கு அதெல்லாம் அதிர்ச்சி தரவில்லை. சுவர் எல்லாம் கரிக் கோட்டில் குழந்தை எழுத்துக்களில், நிர்மலா ராஜரத்தினம். நிர்மலா ராஜரத்தினம், என்று எழுதியிருந்தது!

*நிர்மலா! அந்தப் பேரை எங்கே கேட்டிருக்கேன்? ஆம். அன்று இரவு பேசிக்கொண்டிருந்தார்களே!.*

*''ஒன்று கிடக்க ஒன்று ஆகிவிடப் போகிறது, நிர்மலா மாதிரி.''*

*நிர்மலா ராஜர...*

*என் சகல சக்திகளும் இழந்து அப்படியே அங்கேயே இடிந்து உட்கார்ந்து விட்டேன்!*

*கடவுளே! இந்த இடத்திலிருந்து எப்படித் தப்பிக்க போகிறேன்!*

## 4

**தீ**ர்மானித்துவிட்டேன். என் உயிருக்கு உயிரான இந்த நோட்டுப் புத்தகத்தை விட்டு பிரிவது என்று, இந்த ஒருவழிதான் எனக்குத் தோன்றுகிறது. என் முதல் ஹனிமூன் தினத்தின்போது பெங்களூரில் வாங்கியது இந்த நோட்டுப் புத்தகம். இதில் என் உணர்ச்சிகளை, நிகழ்ச்சிகளை அப்படியே இதுவரை எழுதி வந்திருக்கிறேன். என் சொந்தத் திருப்திக்காக, என் சொந்த நிம்மதிக்காக எனக்கு இப்போது இந்த நோட்டுப் புத்தகம் தான் உதவப் போகிறது. என நினைக்கிறேன். இதை நான் மிகவும் அவசரமாக எழுதுகிறேன். மாசாமாசம் டிரைவர் வந்து வீட்டில் இருக்கும் அத்தனை பத்திரிகைகளையும், செய்தித்

தாள்களையும், விலைக்கு விற்க எடுத்துச் செல்வான். ஹாலில் பத்திரிகைகள் கட்டி வைத்திருப்பதைப் பார்த்தேன். அந்தக் கட்டுகளில் ஒன்றில் இதைச் செருகியும் விடப் போகிறேன். இது யார் கையிலாவது சிக்கும். அவர்கள் இந்தப் புத்தகத்தின் வரிகளைப் படித்துவிட்டு என்னை வந்து உடனே காப்பாற்றுவார்கள் என்கிற ஒரே ஒரு நம்பிக்கையில்...

இதுவரை இதைப் படித்துக்கொண்டிருந்த.....என்ற சினேகிதரே அல்லது சினேகிதியே! என்னை வந்து காப்பாற்றுவீர்களா? இனம் புரியாத அபாயத்தின் வாசலில் நிற்கும் அபலைப் பெண் காயத்ரியை வந்து காப்பாற்றுவீர்களா? சீக்கிரம்! சீக்கிரம்!

அவ்வளவுதான்.

இதைப்படித்ததும் என் உணர்ச்சிகள் எப்படி இருந்திருக்கும் என்று சொல்லத் தேவையில்லை. காயத்ரிக்கு உதவி செய்ய உடனே செல்ல வேண்டியது கட்டாயமாகிவிட்டது. அவளை அபாயத்திலிருந்து காப்பற்ற வேண்டியது என் கடமையாகி விட்டது. எந்த அபாயம்? சரியாகத் தெரியவில்லை. அதைவிட-

காயத்ரி உதவி தேவை என்று தான் எழுதியிருந்தாள். ஆனால் அவசரத்தில் ஒரே ஒரு முக்கிய விவரம் கொடுக்க மறந்து விட்டாள். அவள் வீட்டு விலாசம். இந்தப் பரந்த சென்னையில் எப்படித் தேடுவது? கல்சுவருக்குள் கூர்க்கா வைத்து வாழும் ஒரு ராட்சச ராஜரத்தினத்தை எப்படித் தேடுவது? உங்களுக்கு உடனே தோன்றியிருக்கும். ராஜரத்தினம் என்ற பெயரை டெலிபோன் டைரக்டரியில் பார்த்தேன். சென்னையில் எத்தனை ராஜரத்தினங்கள் பட்டியலிட்டிருக்கிறதோ அத்தனை பேரையும் ஒவ்வொருவராக போய்ப் பார்க்கலாம். அது ஒரு முறை, lost resort ஆக வைத்துக் கொள்ளலாம். காயத்ரிக்கு உடனே உதவி தேவை, நேரம் தாழ்த்த முடியாது வேறு ஏதாவது வழி இருக்குமா அவள் விலாசத்தை சட்டென்று கண்டுபிடிக்க?

எனக்கு என் அரிய நண்பர் கணேஷ் என்னும் வக்கீலின் ஞாபகம் வந்தது. கணேஷை விலாசம் கண்டுபிடிக்க வேறு வழி இருக்கிறதாவென்று கேட்பதுடன் அவளுக்கு நான் சட்டப்படி எப்படி உதவி செய்ய முடியும் என்பது பற்றிக் கேட்டுக்கொள்ளலாம். எனவே கணேஷுக்கு டெலிபோன் செய்துவிட்டு அவனைச் சந்திக்கச் சென்றேன்.

கணேஷ் கோர்ட்டுக்கு எதிரே ஒரு சந்தில் ஒரு அறையில் ஆபிஸ் வைத்திருக்கிறான். வாசலில் ஏழெட்டு கட்சிக்காரர்கள் காத்திருக்க அவன் ஆபீஸில் அதிக படாடோபம் கிடையாது. டைப்ரைட்டர் ரிப்பன் பெட்டியின் மூடிதான் ஆஷ்டிரே! சென்ற தடவை பார்த்ததற்குக் கொஞ்சம் வயசாகி இருந்த மாதிரி இருந்தான் கணேஷ். தீர்க்கமான மூக்கு, அகன்ற நெற்றி...

''ரொம்ப நாளாச்சு பார்த்து, என்னைப்பற்றி நிறையத் தப்புத்தப்பாக எழுதித் தப்பித்துக் கொண்டிருக்கிறீர்கள். என்ன விஷயம் சொல்லுங்கள்?''

''இந்தப் புத்தகத்தை படி கணேஷ்!''

''என்ன புதுசாக ஏதாவது கதையா, இது பற்றி legal opinion வேண்டுமா? உங்கள் பேரில் ஒரு film actress இருக்கிறாளே!''

கணேஷ் அதைப் புரட்டி, ''இவ்வளவு தமிழ் படிக்க எனக்கு அவகாசம் கிடையாது என நினைக்கிறேன் சுருக்கமாக நான்கு வரிகளில் சொல்லி விடுங்களேன். Bought in Bangalore on the day I lost my virginity கொஞ்சம் இருங்கள்...

அடுத்த முக்கால் மணிநேரம் கணேஷ் மௌனமாக புகை பிடித்துக்கொண்டு ஒரு வரி விடாமல் அதைப் படித்தான். என்னைப் பார்த்தான்.

''உங்கள் முதல் கேள்வி, அவள் விலாசம் இல்லையே, எப்படி அவள் உதவிக்குப் போவது என்பதுதானே?''

''ஆம். இரண்டாவது கேள்வி அங்கு என்ன நடக்கிறது?

''கொஞ்சம் இருங்கள்.... வசந்த்"

சரியாக நாற்பது நிமிஷத்தில் விலாசத்தை கண்டுபிடித்துவிட்டார்கள் இரண்டுபேரும்,

## ஐந்து

கணேஷ் எப்படி அந்த முகவரியைக் கண்டுபிடித்தான் என்பதைச் சுருக்கமாக சொல்கிறேன். காயத்ரியின் நோட்டுப் புத்தகத்தைப் புரட்டி புரட்டி படித்தான். பெங்களூரில் காயத்ரி அவள் கணவன் ரத்னாவுடன் ஹனி மூனுக்குச் சென்று தங்கியிருந்த தேதியும் ஓட்டலின் பெயரும் அந்த நோட்டுப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததைப் பிடித்துக்கொண்டான். வசந்தைக் கூப்பிட்டு வைத்துக் கொண்டான். டெலிபோனை வெள்ளமாகச் சுழற்றினார்கள். "You are Paying" பெங்களூரில் அந்த ஓட்டலில் ரூம் கிடைப்பது கஷ்டம். முன்பே எழுதி ரூம் 'ரிசர்வ்' பண்ணியிருக்கலாம். முன்னே எழுதியிருந்தால் பதில் எழுதவேண்டிய முகவரியும் கொடுத்துத்தான் எழுதியிருக்க வேண்டும். மேலும் ஓட்டலின் ரிஜிஸ்தரில் அவர்கள் விலாசம் இருக்கலாம். இருக்கவேண்டும். STD யில் முனைந்து பெங்களூரில் அவனுக்குத் தெரிந்த போலீஸ் அதிகாரியுடன் பேசி ஒரு நாற்பது நிமிடத்தில் அந்த வீட்டு முகவரி என்னும் விலாசம் ஹோட்டலின் ரிக்கார்டுகளிலிருந்து 'லபக்' என்று அகப்பட்டது.

''அம்பிகா காலனி! அது எங்கே இருக்கிறது?'' என்றேன்.

''ஏய் வசந்த்! அம்பிகா காலனி?''

''நான் என்ன நடமாடும் ரோடு மேப்பா, தினம் தினம் ஒரு காலனி. அம்பிகா... எங்கேயோ இந்தப் பெயரைக் கேள்விப்பட்டிருக்கிறேன்.... கொஞ்சம் இருங்கள் ... ரொம்ப ஊருக்கு வெளியே இருக்கிறது என்று நினைக்கிறேன். பாஸ் நீங்கள் போகப் போகிறீர்களா?''

''ம்ஹூம். ஸார் தான் போகப் போகிறார்''.

நான் சற்று அதிர்ச்சி அடைந்தேன்.

''நான் கூடப் போக வேண்டுமா?'' என்றான் வசந்த்

''ம்ஹூம். நீ எதற்கு? ஸார் தனியாகப் பார்த்துக் கொள்வார். கில்லாடி அவர்!''.

''நீங்கள் வரவில்லையா?''

''நாங்கள் எதற்கு?''

''எதாவது நடந்து விட்டால்?''

''அது உங்கள் உத்தேசத்தைப் பொறுத்தது. நீங்கள் என்ன செய்வதாக இருக்கிறீர்கள்?''

காயத்ரியைக் காப்பாற்ற வேண்டாமா?''

''காப்பாற்ற வேண்டிய பெண்கள் இந்த மெட்ராஸின் நடு செண்ட்டரிலேயே சந்துக்குச் சந்து இருக்கிறார்களே இதற்காக அம்பிகா காலனிக்குப் போக வேண்டுமா? மேலும் நீங்கள் அங்கே சென்று அந்தப் பெண்ணைப் பார்த்து என்ன செய்வதாய் உத்தேசம்? 'பெண்ணே, உன் கதையைப் படித்தேன். வா என்னுடன். வந்துவிடு. நான் காப்பாற்றுகிறேன்.' என்று அழைத்து வரப் போகிறீர்களா impossible. கிங் ஆர்தர் காலத்துடன் இந்த தீரச் செயல்கள் நின்று விட்டன.''

''காயத்ரியைச் சந்திக்க உனக்கு ஆவலாக இல்லையா கணேஷ்? அவள் எப்படிப்பட்ட பெண்! அவளுக்கு உதவி தேவையாக இருக்கிறதா, இல்லையா? இதைப்படித்ததும் உனக்கு என்ன தோன்றியது?''

''ரைட்டர் ஸார், இதைப் படித்ததும் எனக்கு இரண்டு சாத்தியக் கூறுகள் தோன்றுகின்றன. இந்த வரிகளை எழுதிய காயத்ரி உண்மையாகவே அந்தச் சூழ்நிலையில் இருக்கலாம். அல்லது சில கற்பனை பயங்கள் அவள் மனத்தை ஆக்ரமித்து, சிறிய விஷயங்களை வேறு ரூபத்தில் காட்டியிருக்கலாம்.''

''அது நமக்கு எப்படித் தெரிவது?''

''தெரிந்தே ஆக வேண்டுமா?''

''வேண்டாமா?''

''சரி போய்ப்பாருங்கள்.. போய் அவளைச் சந்திக்க முடிகிறதா பாருங்கள். தனியாகச் சந்தித்தால் நலம். ஏதாவது எசகேடாக நிகழ்ந்துவிட்டால் என் டெலிபோன் நம்பர் உங்களுக்குத் தெரியும்.''

கணேஷ் அவ்வளவு உற்சாகமில்லாமல் இருப்பதின் உள் நோக்கம் எனக்குப் புலப்படவில்லை. என்மீது உள்ள கோபத்தில் இருக்கிறான் என்று நினைத்தேன்.

''சரி, நான் போய்ப் பார்க்கிறேன்.'' என்றேன் தீர்மானமாக.

''பெஸ்ட் ஆஃப் லக்! அப்புறம் நடந்ததை என்னிடம் சொல்லுங்கள்.''

''கணேஷ்! மற்றொரு விஷயம்! காயத்ரியின் வாக்கியங்களிலிருந்து அந்த வீட்டில் என்ன நடக்கிறது என்று உத்தேசிக்க முடிகிறதா உன்னால்?''

''முடியும் என நினைக்கிறேன். அதற்கு காயத்ரியின் வரிகளை நான் கொஞ்சம் நிதானமாகப் படிக்கவேண்டும். ...நோட்டுப் புத்தகத்தை எடுத்துச் செல்லப் போகிறீர்களா?''

''ஆம். இதை அடையாளம் காட்டித்தான் அவளை அணுக முடியும் என நினைக்கிறேன்...''

''நான் பார்த்து யோசித்து வைக்கிறேன். அவர்கள் நால்வரும் ஒரு கோஷ்டி என்பது மட்டும் தெரிகிறது. சமையற்காரன், பெண், அக்கா, கணவன். இது அவர்கள் காய்த்ரியின் முன் போடும் நாடகத்தின் பாத்திரங்கள். அவர்கள் வேலை? நீங்கள் தான் போகிறீர்களே கண்டுபிடியுங்கள், பார்க்கலாம். கண்டுபிடிக்க முடியா விட்டாலும் அந்த வீட்டின் சூழ்நிலையைக் கூர்ந்து கவனியுங்கள். உங்களுக்குச் சொல்லியா தரவேண்டும்.

ஏதாவது தடையங்கள் கிடைத்தால் என்னிடம் சொல்லுங்கள்.''

எனவே நான் மாலை சுமார் ஐந்து மணிக்கு நம்பர் 1 அம்பிகா காலணியை அடைகிறேன். அதுதான் பிரயாணத்தின் முடிவாகப் படுகிறது. அதுவரை எழுத்து வடிவத்தில் தெரிந்த காயத்ரியை உண்மை ரூபத்தில் பார்க்கப் போகிறேன். கையில் அவள் புத்தகம்... மனத்தில் எக்கச்சக்க எதிர்பார்ப்பு .. எப்படியும் அவளைத் தனியாகச் சந்திக்க முற்பட வேண்டும். அப்போதுதான் அவள் இயல்பாக இருப்பாள். முன்பின் தெரியாத வீட்டில் சென்று அந்த வீட்டில் வசிக்கும் ஒரு மனைவியை ஒரு அன்னியன் சந்திப்பது எப்படி? எனக்குத் தெரியவில்லை.

நான் மெதுவாக அந்த வீட்டை அடைகிறேன். காயத்ரியின் வாக்கியங்கள் ஞாபகத்திற்கு வந்தன. ஆம் அப்படியே இருந்தது. கருங்கல் காம்பவுண்டு சுவர் கண்ணாடித்துண்டு பதித்து. வாசலில் 'மரகும்பாச்சி' கூர்க்கா 'மூஞ்சி பூரா சிரிப்பான்.'

இப்போது அவன் சிரிக்க வில்லை. என்னைத் தடுத்து நிறுத்தினான்.

''கர்மே கோயி நஹி ஹை!'' என்றான்

''எல்லோரும் எங்கே?'' என்று அபிநயித்தேன்.

''பாஹர் கயேன் ஹை! ஆப் கோன் ஹை?''

''நான், மே..மே.. மே'' என்று ஆட்டுக்குட்டிப்போல் செய்து கொண்டிருக்க பின்னால் கார் ஹாரன் சப்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தால்... கணேஷும் வசந்தும் ஃபியட் காருக்குள் தெரிந்தார்கள். நான் அவர்களிடம் சென்றேன். ''என்ன ஸார். என்ன ஆயிற்று?.''

''வீட்டில் ஒருவரும் இல்லையாம்!''

''நீங்கள் காருக்குள் ஏறுங்கள். விஷயம் கொஞ்சம் விசித்திரமாக இருக்கிறது.''

''என்ன?''

நான் காரில் ஏறிக்கொண்டேன்.

''வசந்த் சொல்லு!'' என்றான் கணேஷ்.

''நீங்கள் கிளம்பின பின் காயத்ரியின் கதையில் நான் எழுதி வைத்துக்கொண்ட குறிப்புகளை மறுபடி பார்த்தேன். கொஞ்சம் ரிசர்ச் பண்ணினேன். கொஞ்சம் யோசித்தேன். கொஞ்சம் கண்டுபிடித்தேன். அவர்கள் உண்மையான பிசினஸ் என்ன என்று ஊகிக்க முடிகிறது காயத்ரியின் புத்தகத்திலிருந்து.''

''என்ன அது?''

''காயத்ரி அடிக்கடி குளிக்கும் போதோ அல்லது படுக்கை அறையிலோ 'யாரோ பார்க்கிறார்கள்' என்ற உணர்ச்சி ஏற்படுவதாக எழுதியிருக்கிறாள் அல்லவா? பாத்ரூமில் கதவில் ஒரு துவாரம்... அப்புறம் ரத்னா படுக்கை சம்பவத்தின் போது விளக்கை அணைக்க மறுப்பது. அப்புறம் அய்யர் 'எல்லாவற்றையும் மறுபடி எடுக்க முடியாது' என்று சொல்வது அதெல்லாம் பார்த்தால் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று எங்களுக்குத் தோன்றுகிறது தெரியுமா?''

''என்ன?''

''அந்தப் பெண்ணுக்கு அலங்காரம் செய்து நகை போட்டுப் பார்ப்பதைப் பற்றி காயத்ரி எழுதியிருக்கிறாளே. ஏன் தெரியுமா?''

''ஏன்?'' என்றேன் ஆவலுடன்.

வஸந்த் பதில் சொல்லவில்லை

''இதோ அவர்கள் வந்து விட்டார்கள்!'' என்றான். நான் எதிரே பார்த்தேன். ஒரு கார் அந்த வீட்டு வாசலில் சென்று நிற்க, கூர்க்கா அவசர அவசரமாகக் கதவைத் திறந்தான்.

''வசந்த்! அந்தக் காரின் பின்னலேயே ஓட்டிக்கொள்.'' என்றான் கணேஷ்

''என்ன செய்கிறார்கள்?'' என்றேன் ஆவல் தணியாமல்.

''அப்புறம் பேசலாம். இப்போது கொஞ்சம் ஆக்ஷன் ரைட்டர் சார், அந்த வீட்டில் நடப்பது நாங்கள் நினைப்பது என்றால் அந்த மாதிரி காரியங்கள் செய்பவர்கள் கொலை பாதகத்திற்கும் அஞ்ச மாட்டார்கள். ஜாக்கிரதையாக அணு அணுக வேண்டும். எனவே நானும் உங்களுடனும் வர தீர்மானித்து விட்டேன்.''

கூர்க்கா எங்களை நிறுத்தினான்.

''வசந்த்- நிற்காதே அந்த காருடன் போ!''

வீட்டில் போர்ட்டிகோவில் அந்தக் கார் நிற்க. அதன் முதுகை ஏறக்குறைய முத்தமிட்டுக் கொண்டு எங்கள் வண்டி நின்றது.

கூர்க்கா அங்கிருந்து விசில் ஊதிக்கொண்டு எங்களை நோக்கி ஓடிவந்தான்.

அந்தக் காரின் பின்பக்கம் ஒரு பெண் உட்கார்ந்திருந்தாள். முன்புறம் இருவர். அதில் டிரைவர் சீட்டிலிருந்து இறங்கியவன் எங்களைப் பார்த்தான் கேள்விக்குறி, மற்றொருவன் இறங்கி வேஷ்டியை சரி செய்து கொண்டான். குடுமி வைத்திருந்தான். காதில் கடுக்கன். வெள்ளை ஜிப்பா, அய்யர்.

''யாரப்பா அது?'' என்றான் அந்த இளைஞன். சட்டென்று அவன் அழகான, இளமையான முகம் எனக்குத் தெளிவாகத் தெரிந்தது. இவன் ராஜரத்தினமாக இருக்கக் கூடும் என்று தோன்றியது.

''யார் நீங்கள் எல்லாம்? ஏய் பகதூர், ஏன் இவர்களை உள்ளே விட்டாய்...''

''ஸாப் யெ லோக்'' என்று துவங்கி சிக்கலான ஹிந்தியில் நாங்கள் வந்த குற்றத்தை வர்ணித்தான் கூர்க்கா.

''மிஸ்டர் ராஜரத்தினம்?''

''எஸ்''

''உங்களுடன் பேச வந்திருக்கிறோம்''

''என்ன?''

''பிஸினஸ்?''

''என்ன பிஸினஸ்?''

''உங்கள் பிஸினஸ்''

''என் பிஸினஸ் இரும்பு வியாபாரம். அது பற்றிப் பேச என் ஆபிஸிற்கு வரவேண்டும் நீங்கள். இப்படி வீட்டிற்குள் நுழைந்து...''

''நான் வந்தது இரும்பு வியாபாரத்துக்கு அல்ல''

''பின்''

''மிஸ்டர் ராஜரத்தினம்! இப்படி வைத்துக் கொள்ளலாமே! என் நண்பர் காரின் உள்ளே உட்கார்ந்திருக்கிறார். சற்றுப் பசையுள்ளவர். அவர் சில காட்சிகளைப் பார்த்தார். அந்தக் காட்சிகள் அவருக்கு மிகப் பிடித்துப்போய்விட்டன. என்னை மிகவும் தொந்தரவு செய்கிறார். எப்படியாவது வாங்கித் தர வேண்டும். எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கொடுக்கத் தயார் என்று..''

''காட்சிகள்?''

''ஆம் காட்சிகள்... படுக்கை அறையில், குளிக்கும் அறையில்... விதவிதமான நகைகளுடன்...''

அவன் முகம் மாறியது. ''பார்ட்டி யார் ?''

''ஸார் கொஞ்சம் வருகிறீர்களா?'' என்று என்னைப் பார்த்து கூப்பிட்டான் கணேஷ். நான் காரை விட்டு இறங்கினேன்.

''மிஸ்டர் ராஜரத்தினம்! மீட் மிஸ்டர் உமாகாந்த்...''

உமாகாந்த்! நான் எப்போது உமாகாந்த் ஆனேன்.

''மிஸ்டர் உமாகாந்த். செக் புத்தகம் கொண்டு வந்திருக்கிறீர்கள் அல்லவா?''

நான் திரு திரு என்று முழிக்காமல் இருக்கப் பிரயத்தனப்பட்டேன்.

வளையல்கள் குலுங்கும் சப்தம் காரினுள் கேட்டது.

''ஐயாம் ஸோ ஸாரி! நம் பிஸினஸ் பேச்சில் இவர்களை மறந்தே விட்டோம்!''

அய்யர் கதவைத் திறக்க அந்தப் பெண் வெளிப்பட்டாள்...

''திஸ் இஸ் காயத்ரி... மை வைஃப். திஸ் இஸ் மிஸ்டர் உமாகாந்த். திஸ் இஸ் மிஸ்டர்...''

''கணேஷ்''. என்றான் கணேஷ்

## ஆறு

**''உ**ள்ளே வாருங்கள்'' என்றான் ராஜரத்தினம். காயத்ரி எங்களைப் பார்த்துவிட்டு எதுவும் சொல்லாமல் உள்ளே சென்றாள். வீடு காயத்ரி வருணித்திருக்கும் வீடு தான். அவுட்ஹவுஸ் கூடத் தெரிந்தது. அங்கே விளக்கு எரிந்து கொண்டிருந்தது. என் கையில் இருந்த காயத்ரியின் நோட்டுப் புத்தகத்தை மறைப்பதா என்பது பற்றி நான் யோசித்தேன். கணேஷின் சாகசத்தின் திசை எனக்குச் சரியாகப் பிடிபடவில்லை. என்ன பிஸினஸ் அது? பார்க்கலாம்.

அந்த வீடு செல்வச் செழிப்பைக் காட்டியது. நுழைந்ததும் நீண்ட ஹாலின் முடிவிலேயே 'டைனிங்டேபிள்' போட்டு அதனுடன் சிநேகிதமாக ஆறு நாற்காலிகள் காத்திருந்தன. அலமாரியில் பலப் பலவர்ணப் புத்தகங்கள் தென்பட்டன. John Fwles, Magus, Art of film making, Konarak...

''உட்காருங்கள் மிஸ்டர் உமாகாந்த்''

நான் உமாகாந்த்தா!

உட்கார்ந்தேன். கணேஷைப் பார்த்தேன். 'என்னிடம் விடுங்கள். கவலைப்படாதீர்கள்' என்று அவன் சாடை காட்டியதை ராஜரத்தினம் பார்த்திருக்க முடியாது. வசந்த் பாடிக் கொண்டே ஹாலை சுற்றும் முற்றும் நோட்டம் விட்டான்.

ரத்னா, ''என்ன சாப்பிடுகிறீர்கள், ஏதேனும் குளிர்பானம் வேண்டுமா?'' என்றான். நல்ல அழகான இளைஞன் தான். பளபள என்று பாதாம் பருப்பிலேயே வளர்ந்திருக்கிறான் என்று தோன்றியது. கையில் தொளதொள என்று சங்கிலி. மார்பில் புலி நகம் தெரியும் சங்கிலி. மீசையிலும் தலைமயிரின் 'பப்' என்ற நேர்த்தியான அடர்த்தியிலும் நல்ல உழைப்பு தெரிந்தது. பொலிகாளை மாதிரி இருந்தான். காலைத்தரையில் ஒரு தரம் தேய்த்த விட்டு புஸ் என்று மூச்சு விட்டிருந்தால் ஆச்சர்யப் பட்டிருக்க மாட்டேன்.

''சொல்லுங்க மிஸ்டர் உமாகாந்த்'' என்றான். கால்மேல் கால் போட்டுக் கொண்டு ஒயிலாக உட்கார்ந்தான். நான் காயத்ரியின் நோட்டுப் புத்தகத்தை இடது பக்கம் எனக்கும் சோபாவின் கைக்கும் இடையில் செருகிக் கொண்டு, ''கணேஷ்! பேசி முடித்துவிடு'' என்றேன்.

'பேசி முடித்துவிடு' என்பது எல்லா சந்தர்ப்பத்திற்கும் பொருந்துமாதலால்.

கணேஷும் ரத்னாவும் பேசி முடித்துக் கொண்டதில் எனக்குப் பாதி புரியவில்லை.

''நீங்கள் எது பார்த்தீர்கள்?''

''பெயர் ஞாபகமில்லை. ஆனால் ப்ரில்லியண்ட்! கொடுத்த காசுக்கு மதிப்பு... புதிதாக ஏதாவது எடுக்கிறீர்களா?''

''எடுத்துக் கொண்டிருக்கிறோம்...''

''கோவில் நகைகள் எல்லாம் அணிந்து கொண்டு எடுப்பாக, டார்க் ஆக டான்ஸ் ஆடுகிறாளே அந்தப் பெண் ...ஸுப்பர்ப்!'' என்றான் கணேஷ்.

''நீங்கள் இந்திராவைச் சொல்கிறீர்கள்!''

''இந்திராவா அவள் பெயர்?''

''இந்திரா! இந்திரா!'' என்றான் வசந்த்.

''அவளைப் பார்க்க விரும்புகிறீர்களா?!''

''பை ஆல் மீன்ஸ்!''

''என்ன ரத்னா?'' என்று குரல் கேட்டுத் திரும்பினேன். சரஸ்வதி! ஆம் அவள் தான் சரஸ்வதியாக இருக்க வேண்டும். அம்மாடி! ஒரு இந்தியப்பெண்ணுக்கு இத்தகைய அதிக உயரம், வளர்த்தி, அடர்த்தி! அவள் உடைகளை மீறி வழிந்து கொண்டிருந்தாள் சரஸ்வதி. நல்ல உயர்தரப் பட்டுப் புடவை அணிந்து கொண்டு, சிக்கனமாக தலையை முடிந்துகொண்டு, நெற்றியில் ஒன்றுமில்லாமல்... நாற்பது வயதிருக்கும். இன்னும் அழகு தேங்கியிருக்கும் சரஸ்வதி. காயத்ரியின் வருணனை கச்சிதமாகப் பொருந்துகிறது.

''ரத்னா, இவர்கள் எல்லாம் யாரு?''

''ஒரு பார்ட்டி! சரஸு...பிஸினஸ் விஷயமா வந்திருக்கா.''

சரஸ்வதி, எங்களைச் சந்தேகமாகப் பார்த்தாள். ''என்ன பிஸினஸ்?''

''நம்ம பிஸினஸ் சரஸு. பயப்படாதே. எல்லோரும் ஃப்ரெண்ட்ஸ்தான்.''

''நம்ம பிஸினஸைப் பற்றி இவர்களுக்கு எப்படித் தெரிஞ்சுது என்று கேட்டாயா?''

''இன்னும் இல்லை.''

''கேள்.''

''எப்படி ஸார் தெரிஞ்சுது? எப்படி அட்ரஸ் கிடைச்சுது...''

கணேஷ் வசந்தைப் பார்த்தான்.

''ஹோட்டல் ட்ரீம்லாண்டில் சொன்னாங்க!''

''ஹோட்டல் ட்ரீம்லாண்டா! யாரு?''

''அங்கேதானே பார்த்தோம்! ஒரு குஜராத்திப் பையன் சிவப்பா கண்ணாடி போட்டுக்கிட்டு... என்ன பேரு? பாட்டீலா?''

சரஸ்வதியும் ரத்னாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள கணேஷ், ''இத பாருங்கம்மா, எங்களுக்குச் சரக்கு பிடித்துவிட்டது. ஈஸ்ட் ஆப்ரிக்காவில் அதற்கு நல்ல டிமாண்ட் இருக்கிறது. மற்றும் லண்டன், பாரிஸ் எங்கேயும் எடுபடும். மால் பிரமாதம். ஸார் அதிலே ஊறினவர். (என்னைப் பார்த்து! நானாம்! ஊறினவனாம். எதிலே?) அவருக்கு எமௌண்ட் பெரிசில்லை.'

''எவ்வளவு கொடுப்பார்'' என்றாள் சரஸு.

''உங்களுக்கு இதுவரை எவ்வளவு கிடைத்து வந்ததோ அதைப் போல இரண்டு பங்கு! அதுவும் அட்வான்ஸா!''

ஒரு பெண் வந்து மவுனமாக எங்கள் முன்பு வெள்ளித் தம்ளரில் காப்பி கொண்டு வைத்துச் சொன்றாள். அவளை ரத்னா கை சொடுக்கி, ''இதோ பார் இந்திரா'' என்றாள்.

''ஓ! இதுதானா?'' என்றான் கணேஷ். நல்ல மதமதப்பாக, கறுப்பாக, வாட்ட சாட்டமாக இருந்தாள். நகை போட்டுக் கொண்ட இந்திரா... இந்திரா..

வசந்த் அவளருகில் சென்று, அவளைச் சுற்றி வந்தான் 'ஷ்ய்' என்று விசிலடித்து, ''தலைமேல் கை வைத்துக் கொள்'' என்றான்.

அவள் செய்தாள்.

''மெல்லத் திரும்பு'' என்றான்.

திரும்பினாள் புடவைக் கடை பொம்மை போல.

"Great Stuff boss" என்றான், கணேஷிடம். அவளைப் பிருஷ்ட பாகத்தில் தட்டி, ''போ! போய் தூச்சிக் கொள். வருகிறேன்'' என்றான்.

''மிஸ்டர் ரத்னா! நீங்கள் இப்போது எடுப்பதிலிருந்து கொஞ்சம் சாம்பிள் காட்ட முடியுமா?'' என்றான்.

''எப்போது காட்ட வேண்டும்?''

''இப்போது... ஸார் நாளைக்கு ப்ளேனில் பம்பாய்க்குப் போகிறார்.''

நானா?

அவர்கள் தயங்கினார்கள். ''பணம் கொண்டு வந்திருக்கிறோம். இன்றைக்கே பேச்சு வார்த்தை எல்லாம் முடித்து விடலாம் பாருங்கள். இந்த விஷயத்தில் எல்லாம் இழுபறி கூடாது.''

''ஏற்பாடு பண்ணலாம். அரைமணி நேரம் ஆகும். துண்டு துண்டாக இருக்கிறது.''

''காத்திருந்தால் போகிறது. என்ன ஸார்!''

''தாராளமாக'' என்றேன். கணேஷின் காதின் அருகே சென்று பிஸினஸ் விஷயம் பேசுவது போல், ''எதற்குக் காத்திருக்க வேண்டும்?.. '' என்றேன்.

''பின்னால் தெரியும்'' என்றான்.

காப்பியை உறிஞ்சிக்கொண்டே நான் ரத்னாவிடம் ''மிஸ்டர் ராஜரத்னம் உங்கள் மனைவியை எங்கே காணோம்?'' என்றேன்.

''சரஸு! காயத்ரி எங்கே?''

''தலைவலி என்று சொல்லி உள்ளே போனாள். அவளுக்கு உடம்பு சரியில்லை. இரண்டு நாளாகச் சரியாகச் சாப்பிடக் கூட இல்லை.''

''பரவாயில்லை'' என்றேன்.

கணேஷ், ''காயத்ரி? எக்ஸைட்டிங் நேம்?'' என்றேன்.

''ஓ! எஸ்'' என்றான் ரத்னா அசட்டுச்சிரிப்புடன்.

''காயத்ரிக்கு இதெல்லாம் தெரியுமா?'' என்றான் கணேஷ் கண் சிமிட்டினான்.

''தெரியாது!''

சரஸ்வதி என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள். ''இவரை எங்கேயோ பார்த்த ஞாபகமாக இருக்கிறது'' என்றாள். எனக்குக் கன்றுக்குட்டி உதைத்தது.

''உமாகாந்த் காயத்ரியைப் பார்க்க ரொம்ப ஆவலுடன் வந்தார். என்ன இருந்தாலும் நேரில் பார்க்கிறமாதிரி உண்டா?'' என்றான் கணேஷ்.

''நான் வரச்சொல்கிறேன். இந்திரா...! இந்திரா...''

''இந்திரா எதற்கு? நான் போய் அழைத்து வருகிறேன்...'' என்று என்னை மறுபடி பார்த்து புன்னகைத்து விட்டுச் சொன்றாள். ஒரு கணம் அந்த சரஸ்வதி என்னை மார்பில் மிதித்தாற் போலிருந்த காட்சியிலிருந்து சிலிர்த்துக் கொண்டு விடுபட்டேன்.

''காயத்ரி காயத்ரி காயத்ரி'' என்று சரஸு கூப்பிட்டுக்கொண்டே சென்றாள். எனக்குக் கொஞ்சம் தைரியம் வந்தது. சரஸு என்னைச் சந்தேகிக்கிறாளா? ரத்னா உள்ளே சென்றான். இந்திராமட்டும் நேர்ப்பார்வை பார்த்துக் கொண்டு நின்று கொண்டிருந்தாள். அவளிடம் வசந்த் ''இங்கே வாடி!'' என்றான்.

''என்ன மாமா'' என்றாள்!

''சட், என்னைப் பார்த்தால் மாமா மாதிரியாய் இருக்கிறது?''

''ஷட் அப் வசந்த். இந்திரா போய் கொஞ்சம் ஐஸ் வாட்டர் எடுத்துக் கொண்டு வா?'' என்றான் கணேஷ். வசந்த் விசனமானான். அவள் சென்றதும் கணேஷ் அவசர அவசரமாக, ''ரைட்டர் ஸார்! இப்போது நம்மை ஒரு தனி

அறைக்கு அழைத்துச் செல்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். அங்கே நமக்குக் காட்டப்படுவதை காயத்ரி பார்க்....''

''வா காயத்ரி வா. இவாள்ளாம் நமக்கு வேண்டியவாள் தாம்'' என்ற சரஸ்வதியின் குரல் கேட்டு நாங்கள் கலைந்தோம்.

காயத்ரி வந்தாள், ஏதோ ஒரு மிரண்ட மான்போல் தான் ஒருவரையும் நேராகப் பார்க்காமல் இயந்திரம் போல் வந்து எதிரில் உட்கார்ந்தாள். அவள் புதிதாக முகம் கழுவிக் கொண்டு, நெற்றியில் பெரிதாகப் பொட்டு இட்டுக் கொண்டு, கருநீல நிறத்தில் அகல பார்டர் போட்ட கைத்தறி ஸில்க் புடவை அணிந்து கொண்டு, தழையத் தழையக் கூந்தலில் மல்லிகை தென்பட ஏகப்பட்ட நகைகள் அணிந்து கொண்டு, ஜாஜ்வல்யமாக ஏதோ ஒரு அம்மன் போலத்தான் நின்றாள்...

''ஹலோ காயத்ரி'' என்றேன்.

அவள் குனிந்து கொண்டு, ''ஹலோ'' என்றாள்.

''ரொம்ப வெட்கப்படுகிறார்களே... படத்தில் அப்படி தெரியவில்லையே!'' என்றான் கணேஷ். சரஸ்வதி அவனிடம் வேகமாக வந்து தாழ்ந்த குரலில் ஏதோ பேச, அவன் சரி என்று தலையாட்டினான்.

அந்தப் பெண்ணை, என் கதாநாயகியை இத்தனை நாள் என் மனத்தில் எண்ணங்களை ஆக்கிரமித்துக் கொண்ட... அந்த வீட்டில் வந்து மாட்டிக் கொண்ட.... காயத்ரி என்னும் மனைவியை வெறும் வார்த்தைகளிலிருந்து புறப்பட்டு தசையும் ரத்தமும் நகமுமாகப் பரிணமித்தவளைப் பார்த்தேன்... பெண்ணே உன்னை நாங்கள் காப்பாற்ற வந்திருக்கிறோம்... காப்பாற்றி... அதை எப்படி மற்றவர்கள் எதிரே சொல்லுவது...?

காயத்ரி எங்களைப் பார்க்கவே இல்லை. கீழே பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் தலை குனிந்திருந்தது. அவள்

மார்பு படபடத்துக் கொண்டிருந்தது. அவள் கைகள் மெலிதாக நடுங்கிக் கொண்டிருந்தன...

''பேசு காயத்ரி. இவர்கள் எல்லாம் ரத்னாவின் சினேகிதர்கள்...''

''ம்'' என்றாள்.

எப்படி இவளுக்குச் செய்தி தெரிவிப்பது?

''உடம்பு சரியில்லை என்று சொன்னார்களே? தலைவலியோ?'' என்றான் வசந்த்.

''அதெல்லாம் இல்லை.''

''ஏதாவது மாத்திரை எடுத்துக் கொண்டால் நல்லது.''

''மாத்திரை நிறையச் சாப்பிடுகிறேன். இந்த வீட்டில்,'' என்றாள். சரஸு சற்று முகம் மாறினாள்.

''சரஸு I am sorry. நான் Moodல் இல்லை. நான் என் அறைக்குப் போகலாமா...?''

ரத்னா உள்ளே நுழைய சரஸு, ''இப்படித்தான் வீட்டுக்கு வந்த விருந்தாளிகளை அவமானப் படுத்தலாமா?'' என்று அதட்டினாள்.

''எனக்கு உடம்பு சரியில்லை என்று சொன்னேனே...''

ரத்னா, ''என்ன நடந்தது?'' என்றான்.

சரஸு, காயத்ரி இருவருமே அதற்குப் பதில் சொன்னார்கள். நான், ''பரவாயில்லை பரவாயில்லை. அதனாலென்ன...?'' என்று அந்த ஹாலைச் சுற்றிப் பார்த்துவிட்டு ''மிஸ்டர் ரத்னா... இந்த வீடு எவ்வளவு பெரிதாக சௌகரியமாக இருக்கிறது... என்னதான் நல்ல ஹோட்டல்கள் இருந்தாலும்... வீட்டுக்கு ஈடாகாது. கடந்த ஐந்து நாட்களாகப் பல ஹோட்டல்களில் தங்கி இருந்தேன். எல்லா ஹோட்டல் அறைகளுக்கும் ஒரு வித வாசனை இருக்கிறது. கொஞ்சம் சிகரெட், கொஞ்சம் ஊதுவத்தி, வண்ணான் சலவை, கொஞ்சம் சாவு, கொஞ்சம் கண்ணீர், என்ன என்னவோ.... உங்கள் அனுபவம் என்ன காயத்ரி?''

அந்த வரிகள் காயத்ரியை அப்படியே ஸ்விட்ச் போட்டாற்போல் தலைகீழாக மாற்றியது... திடீர் என்று அவள் என்னை நேராக நிமிர்ந்து பார்த்தாள். புன்னகைத்தாள். ''நீங்கள் நீங்கள்....'' என்றாள்.

''நான் உமாகாந்த், இது கணேஷ். வஸந்த்'' என்று காயத்ரியின் நீல நிற நோட்டுப் புத்தகத்தாலேயே அவர்கள் இருவரையும் காட்டினேன்.

''ரத்னா! ரத்னா! என் தலைவலி சரியாகிவிட்டது'' என்றாள். ''உட்கார் சரஸு'' என்றாள்...

''என்ன இது திடீர் மாறுதல்?'' என்றாள் சரஸு.

உஷாரான கணேஷ், ''சில வேளை Depressionல் இருப்பவர்கள். ஒற்றைத் தலைவலியில் அவதிப் படுபவர்களுக்குத் திடீர் என்று சிலரைப் பார்த்தால், சில குரலைக் கேட்டால் எல்லாம் விலகிவிடும். மிஸஸ் காயத்ரி உங்களுக்கு அலர்ஜிக் ஸைன்ஸைட்டிஸ் ஆக இருக்கலாம். செக் அப் பண்ணுங்கள். இதெல்லாம் கொஞ்சம் காத்திருந்தால் சரியாகிவிடும்'' என்றான்.

''ஓ எஸ்! காத்திருக்கத் தயார்... எனக்குப் பளிச்சென்று சரியாகி விட்டது.. இந்திரா இவர்களுக்கெல்லாம் காப்பி கொடுத்தாயா?''

''சாப்பிட்டாயிற்று. நீங்கள் அலட்டிக் கொள்ளாதீர்கள்.''

அய்யர் உள்ளே வந்து, ''ரெடி'' என்றார்.

ரத்னா எங்களிடம் பொதுவாக - ''வருகிறீர்களா? ஒரு தடவை போட்டுப் பார்த்து விடலாம்..''

கணேஷ், ''மிஸஸ் காயத்ரி! நீங்கள் போய் உங்கள் அறையில் ரெஸ்ட் எடுத்துக் கொள்ளுங்கள். நாங்கள் போவதற்குள் மறுபடி சந்திக்கிறோம்'' என்றான்.

''நானும் உங்களுடன் வருகிறேனே!'' என்றாள்.

ரத்னா, ''வேண்டாம் காயத்ரி. நாங்கள் பிஸினஸ் விஷயமாகப் பேசப் போகிறோம்'' என்றான்.

''சரி, போவதற்குள் என்னை நிச்சயம் பார்த்துவிட்டுப் போகவேண்டும் என்ன?''

''கட்டாயம்! வித் ப்ளெஷர்!'' என்றான், வசந்த் ''சார்மிங் லேடி'' என்றான். ஏரால் ஃப்ளின் மாதிரி முதுகு வளைந்து அவளுக்கு வழி விட்டான்.

''சரஸு, நீயும் வருகிறாயா?'' என்றான் ரத்னா.

''வருகிறேன்'' என்றாள்.

நாங்கள் அந்த வீட்டின் பின்புறத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். மரச் சோலைக்கு இடையில் அஸ்பெஸ்டாஸ் போட்டு, தட்டி மறைத்து ஒரு ஷெட் போல இருந்தது. அதன் மரக் கதவைத் திறந்து முதலில் அய்யர் போக அப்புறம் நான், கணேஷ், வசந்த், ரத்னா, சரஸு...

உள்ளே ஏறக்குறைய காலியாக இருந்தது. நாற்பதடிக்குப் பதினைந்தடி ஹால்போல் இருந்தது. ஒரே ஒரு 40 வாட் பல்ப் எரிந்து கொண்டிருந்தது. ஓரத்தில் பலவித டிரங்குப்பெட்டிகள் தெரிந்தன. ஸ்பிரிட் வாசனை வந்தது. ஏர் கண்டிஷனரின் மூஞ்சி தெரிந்தது.

நடுவே ஒரு வெண்திரை நின்றது நீட்டப்பட்ட அந்தத் திரை குடைபோல் மூடிப் பொட்டமலாக அடக்கி விடக்கூடிய நவீனமான திரை. திரைக்கு எதிரே தூரத்தில் அறையின் முடிவில் ஒரு சிறிய சினிமா ப்ரொஜெக்டா இருந்தது.

ஏழெட்டு இரும்பு நாற்காலிகள் போட்டிருந்தது. நாங்கள் உட்கார்ந்தோம்.

''டெவலப்பிங் எல்லாம் எங்கே செய்கிறீர்கள்?'' - கணேஷ்.

''எல்லாம் இங்கேதான். எல்லாம் அய்யர்! முன் காலத்தில் நியுடோனில் இருந்திருக்கிறார், கில்லாடி... M.K.T.

யுடன் ஆக்ட்கூடப் பண்ணியிருக்கிறார். ஒரு சின்ன லாபரட்டிரி வைத்திருக்கிறோம்... மொத்தம் எங்கள் நாலைந்து பேருக்குத்தான் தெரியும். வெளியிலிருந்து சில சமயம் வரவழைத்துக் கொண்டால் பின்பக்கத்து வழியாகத்தான் கூட்டிக் கொண்டு வருவோம். இந்த வீட்டில் நடப்பது ஒருவருக்கும் தெரியாது...''

''ஆரம்பிக்கலாமா?'' என்றார் அய்யர்.

''ஆரம்பிக்கலாம்.''

விளக்கு அணைந்து சற்று நேரம் இருட்டு. வீர்ர்ர். தலை கீழாக 9, 8, 7, 6... 5... பளிச் - பளிச்.

ஒரு மூடிய கதவு... அதை நோக்கிக் கேமிரா மெதுவாக அணுக, கதவின் ஒரு சிறிய பகுதியில் ஒரு சதுரமான இடம் தனியாகப் பெயர்ந்து கொள்கிறது. பெயர்ந்த கறுப்பினுள் ஒரு துவாரம் தெரிகிறது. அதனுள் காமிரா எட்டிப் பார்க்க உள்ளே நேராக ஒரு பெண் தன் உடைகளை நிதானமாகக் களைந்து அவைகளைச் சுருட்டி ஒரு பிளாஸ்டிக் பக்கெட்டில் போட்டு விட்டு, கெய்ஸரிலிருந்து வரும் வெந்நீரைப் பதம் பார்த்துவிட்டுத் திரும்புகிறாள்.... காயத்ரி...

''மை காட்'' என்றேன்.

''மெல்ல! மெல்ல!'' என்றான் கணேஷ்.

அந்தப் படத்தில் ஒலிப்பதிவு இல்லை. படக் கோர்வையும் இல்லை. ஆனால் அந்தப் படத்தின் காட்சிகளை நான் முன்பே பார்த்திருந்த பரிச்சயம் நிச்சயம் இருந்தது.

இந்திரா படுக்கையின் நட்ட நடுவே உட்கார்ந்திருக்க அவளுக்கு ஒவ்வொரு நகையாக அணிவிக்கப்பட்டு, அவளை மெதுவாக நிற்க வைத்து அவளருகில் மெல்ல வந்து...

ஓ எஸ்! எல்லாம் காயத்ரியின் நோட்டுப் புத்தகத்தில் படித்திருக்கிறேன். இப்போது புரிகிறது... திரைப்படம்

எடுத்திருக்கிறார்கள். சில பிரத்தியேக ரசிகர்களுக்காக, பிரத்தியேக அறையில் காட்டப்படும் பிரத்தியேகப் படங்கள்... ரத்னாதான் கதாநாயகன்! இதோ தெரிகிறானே சுத்தமாக க்ஷவரம் செய்து கொண்டு, சிரித்துக் கொண்டு... கீழே பார்க்க காயத்ரி. அவர்கள் படம் எடுப்பதை அறியாத உள்ளுணர்வில் இனம் புரியாமல் சந்தேகித்த காயத்ரி... அந்த நிர்மலா என்கிற பெண்ணைக்கூட முதலில் உபயோகித்திருக்கலாம். அவளுக்கு விஷயம் தெரிந்துபோய் சித்தப்பிரமை ஏற்பட்டிருக்கலாம் அல்லது ஏதாவது கொடுத்து எக்கச்சக்கமாக ஆகியிருக்கலாம்.

அடுத்த கதாநாயகி காயத்ரி. படுக்கையிலும் பாத்ரூமிலும் அவள் படம் எடுக்கப்பட்டிருக்கிறாள்...

சரஸ்வதி, ரத்னா, அய்யர், இந்திரா... இந்த விசித்திரமான திரைப்பட கோஷ்டி.... அய்யர் காமிரா. ரத்னா கதாநாயகன்.. சரஸுவும் இந்திராவும் வித்யாசத்திற்கு; மாறுதலுக்கு மற்ற பெண்கள். திரைக்கதை வேண்டாம். வசனம் வேண்டாம். ஒரு Bell & Howe! Camara போதும். கையில் பிடித்துக் கொண்டு எடுத்தால் அச்சாகவரும். ட்ரீம்லாண்ட் போன்ற ஹோட்டல்கள் காசு கொடுப்பார்கள்... அன்னியச் செலாவணி நிறைய கிடைக்கும். வாத்ஸ்யாயனர் நாட்டிலிருந்து வந்த சரக்கு என்றால் மவுசு இருக்காதா? மை காட்! காமரா அப்படியே மல்லாந்த, களைத்த காயத்ரியின் மேல் Zoom in ஆகிறது.

கணேஷ் என்னிடம் ரகசியம் பேசினான். நான் மெதுவாக ஒரு பக்கமாக நழுவி அந்த வீட்டின் கதவுப்பக்கம் சென்று தாழ்ப்பாளைத் திறந்து வெளியே வந்தேன். சுவர்க் கோழிகள் ஓவர் டைம் பண்ணிக் கொண்டிருந்தன. மெதுவாக அந்த வீட்டின் ஹாலை அடைந்து மாடிப்படியைக் கடந்து, ''காயத்ரி காயத்ரி'' என்றேன். அந்த அறைக் கதவு உடனே திறந்தது. ''வந்துவிட்டீர்களா?'' என்றாள் படபடப்புடன். ''அவர்கள் எல்லாம் எங்கே?''

''ஷெட்டில் இருக்கிறார்கள். நான் உன்னிடம் செய் சொல்ல வந்தேன். உன் நோட்டுப் புத்தகத்தைப் படித்தேன் நீ எங்களுடன் வருகிறாயா?''

''வருகிறேன். வருகிறேன்! என்னை இ இடத்திலிருந்து எப்படியாவது அழைத்துச் சென் விடுங்கள்... அவர்கள் என்னை வைத்துக் கொண் என்னமோ செய்கிறார்கள். தினம் தினம் மருந் கொடுக்கிறார்கள். கண்ணைச் செருகுகிறது. அந்த சரஸ் இந்திரா, ரத்னா, அய்யர் எல்லோரும் ஒரே கோஷ் என்னை என்னமோ செய்கிறார்கள்-''

''என்ன செய்கிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியு அப்புறம் சொல்கிறோம். நாங்கள் பிஸினஸ் பேசுகிற மாதி பாசாங்கு செய்து கொண்டு இங்கு வந்திருக்கிறோம். நாங்கள் கிளம்புகையில் எங்களுக்கு வழியனுப்ப வருகிற மாதி வந்து புறப்படுகிற காரில் பாய்ந்து ஏறிக் கொண் விடுகிறாயா?''

''செய்கிறேன் செய்கிறேன்... அப்படியே போட்ட போட்டபடி ஓடி வந்து விடுகிறேன்'' என்றாள் - சி குழந்தைபோல் உற்சாகமாகக் குதித்தாள்.

''எங்கே இரண்டு பேரும் கிளம்புவதாக உத்தேசம்?'' என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தால் கையில் ஒ துப்பாக்கியுடன் சரஸ்வதி!

## ஏழு

அந்தக் காட்சியின் முழு அர்த்தம் எனக்குப் பதி ஆவதற்குக் கொஞ்ச செகண்டுகள் ஆயிற் வாட்டசாட்டமான சரஸ்வதி கையில் அசந்தர்ப்பமாகத் துப்பாக்கியை வைத்துக் கொண்டு நிற்கிறாள். துப்பாக்கி நிஜம் என்பதில் எனக்குச் சந்தேகம் ஏற்படவில்லை கன்னங்கரேல் என்று பளபளப்பாக, இருட்டு வாயுடன்... அதன்மூஞ்சியைப் பார்த்தாலே அதன் உண்மை தெரிந்தது என்னை நோக்கி நீட்டிக் கொண்டிருந்தது.

சரஸு என்கிறவள் நிதானமாக அதை என் முக்கிய பாகத்தில் குறி பார்த்தபோது எனக்கு வியர்த்து விறுவிறுத்தது. கடன்காரி! எங்கேயாவது ஒன்று கிடக்க ஒன்று ஆகிவிடப் போகிறது. ''வேண்டாம் வேண்டாம்'' என்றேன் அவசரத்துடன். தீரச் செயல்களுக்கெல்லாம் என் பாடியின் லாயக்கற்ற தன்மையை நினைத்து வருந்தி, என் இரண்டு கைகளையும்... வெட்கமாக இருக்கிறது - ஒரு பெண் எதிரில் ஒரு ஆண் இப்படியா நடுங்க வேண்டும்!

''கணேஷா! வசந்தா!'' என்று கூவினேன்!

''எனக்கு அப்போதே சந்தேகமாக இருந்தது. நீ திரு திருவென்ற விழிக்கிறதைப் பார்த்தேன். ஏண்டா ராஸ்கல்! அராத்து! என்ன தைரியண்டா உனக்கு? எங்கள் வீட்டில் நுழைந்து என் தம்பி பொண்டாட்டியைக் கடத்திக் கொண்டு போகப் பார்க்கிறாயா? முழங்கால்சில்லைப் பேர்க்கட்டுமா? சப்பையைக் கழற்றட்டுமா... ஒதுங்கு அப்படி! (ஒதுங்கினேன்) மூலைக்குப் போ,'' (போனேன்) காயத்ரியைப் பார்த்தாள்.

''ஏண்டி ஓடுகாலி! உனக்குப் பாலீஷ் போட்டு வேளா வேளைக்குச் சோறு போட்டு சொகுசாக வைத்துக் கொண்டால், இப்படிக் கண்ட ஆண்பிள்ளைக்கு கடுதாசிகள் எழுதி வரவழைத்து என் தம்பிக்கு மோசம் செய்கிறாயா?''

''தம்பியாம் தம்பி! மடியில் படுக்கவைத்து பால் கொடு. சரஸு! உன் குட்டெல்லாம் அம்பலம் ஆகிற தேதி வந்து விட்டது. அவர்கள் எல்லாம் ஊர் பெரியமனுஷாள். அவர்களுக்கு இந்த வீட்டில் நடக்கிறது எல்லாம் தெரியும்.''

''பெரிய மனுஷன் நிற்கிறான் பார். இடுப்புப்பாண்டைப் பிடித்துக் கொண்டு மூலையில்.. இவன்தான் உன்னைக் காப்பாற்றப் போகிறானோ?''

''என்னம்மா சேதி?'' என்று அய்யர் வந்தார்.

''வா அய்யர், இந்த ஆசாமியைக் கவனி. காயத்ரியைக் கூட்டிப் போகப் போகிறார்களாம். இந்த அம்மா லெட்டர்

போட்டு வரவழைத்திருக்கிறாள். மூன்று பேரும் திருடர்கள் எங்கே மற்ற இரண்டு பேர்?''

''படம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.'' அய்ய என்னைக் கடுகடு என்று பார்த்தது.

''அவர்கள் படம் பார்க்க வரவில்லை. காயத்ரியை கடத்திக் கொண்டு போக வந்திருக்கிறார்கள்.''

''நான் அப்பவே நினைச்சேன் சரஸ்வதி அம்மா!''

''நினைச்சே, உன் மூஞ்சி! தரித்திரமே! ஏதாவது செய் அந்தப் பெண்ணைக் கட்டி ரூமுக்குள் தள்ளு.''

''செஞ்சால் போச்சு.''

''கிட்டே வராதே. கிழித்துவிடுவேன் கிழித்து'' என்றாள் காயத்ரி.

''நீ கிழித்தால் நான் தாங்கிக் கொள்கிறேன். காயத்ரி என் செல்லம்! என் கண்ணு! உன்னை அங்கம் அங்கமாக போட்டோ பிடித்திருக்கிறேனே! தெரியாதா உனக்கு உன்னை எத்தனை நாளாக இப்படிக் கட்டிப் போடக் காத்து கொண்டிருக்கிறேன் தெரியுமா? இதோ பார்! இது என்ன பேனாக் கத்தி, நேத்திக்குத்தான் சாணைபிடித்துக் கொண்டு வந்திருக்கிறேன். டிர்ர்ர்ர்ர்ர்ர் டிர்ர்ர்ர் பொறி பறக்க! இதை வைத்து உன் கழுத்தை கேக் வெட்டுற மாதிரி வெட்டலாம் என்னடா சொல்றே சோம்பேறி?''

''அவளை விடு. பாப்பாரப் பயலே அவளை விடு'' என்றேன்.

அய்யர் திசை மாறி நோக்கி, ''சரஸ்வதி அம்மா! கீறிப் பார்க்கலாமா கீரணிப்பழம் மாதிரி!'' என்றார். அய்யர் செய்வார் போலிருந்தது. கரி முனிமாதிரி இருந்தார்.

''நீ இவனை விடு. அவளைக் கவனி. கழிசடையை உள்ளே தள்ளு.'' அய்யர் மிக்க சந்தோஷத்துடன் காயத்ரியை நெருங்கி, அவள் புஜங்களைப் பிடித்துத் திருப்ப, அவள் அவரைக் கன்னத்தில் அடிக்க, அவர் மதிக்காமல் வெற்றி

சிரிப்புச் சிரித்துச் சரக்கென்று அவள் ரவிக்கையைக் கிழிக்க? அவள் போர்த்திக் கொள்ள, நான் சரஸ்வதியின் துப்பாக்கியை ஒரு க்ஷணம் மறந்து அவனை நோக்கி ஓடினேன்.

டுமீல்!

நிஜமாகவே வெடித்தது. ஒரு க்ஷணம் என்மேல பட்டு விட்டதோ என்று பயந்து வெலவெலத்து உறைந்து நின்று உடம்பெல்லாம் பார்த்துக் கொண்டேன்.

சரஸ்வதி, ''அடுத்த தோட்டா மேலே படும். குறி தவறாது. இந்த இடத்தை விட்டு நகராதே. ஏய் போடீ உள்ளே.போ உள்ளே!'' என்றாள்.

காயத்ரி அறை வாசலில் அடம் பிடித்து நின்றுகொண்டிருக்க, அய்யர் அப்படியே சாஷ்டாங்கமாக அவளைத் தூக்காத குறையாக உள்ளே தள்ள, அந்தப் பெண் அவரைக் கண்ட இடத்தில் நகத்தால் கீற... தடதடவென்று மாடிப்படியில் ஜனங்கள் ஏறிவரும் சப்தம்கேட்டது.

ரத்னா நுழைந்து, ''என்ன சரஸு இது? என்ன வெடிச் சப்தம்?'' என்றான். அவனுக்கு இரைத்தது. கூடவே கணேஷும் வந்தான். அவன் பின்னால் கூர்க்காவும் கையில் தடியுடன் ஓடிவந்தான். நான் ''கணேஷ் ஜாக்கிரதை'' என்றேன். சில செகண்டுகளில் கணேஷ் நிலைமையை உணர்ந்து கொண்டான். அறைக்குள்ளிருந்து காயத்ரியின் அலறல் கேட்டது. கீச்சுக் குரலில் சரஸு துப்பாக்கியை கணேஷின்பால் காட்டி, ''அங்கேயே நில்'' என்றாள். அவன் சிரித்து, ''தோட்டா இருக்கிறதா?'' என்றான். அவள் ''காது செவிடா? மறுபடி சுட்டுக்காட்டவா!'' என்றாள் ''தேவையில்லை'' என்றான்.

''என்ன சரஸு, என்ன இதெல்லாம்? இவர்கள் எல்லாம் நம் விருந்தாளிகள்.''

''விருந்தாளி! ரத்னா உன்னைப்போல ஏமாளியை நான் பார்த்ததில்லை. மூன்று பேரும் காயத்ரிக்காக

வந்திருக்கிறார்கள். அந்தப் பெண் விச்சுளி மாதிரி இருந்து கொண்டு அவர்களுக்குத் தகவல் அனுப்பி வைத்து அவளைச் சப்தம் போடாமல் கொண்டு போக வந்திருக்கிறார்கள். நீ இவர்களுக்குக் காப்பி கொடுத்து படம் போட்டுக் காட்டுகிறாய். இந்திரா டான்ஸ் வேறு காட்டினாயா? முட்டாள்! பிலிம் வாங்குகிறார்களாம் பிலிம் எல்லாம் ஏமாற்றுவேலை. எங்கே இன்னொருத்தன்?''

''அவன் வாசலில் நிற்கிறான்'' என்றான் கணேஷ்.

ரத்னா கணேஷை முறைத்து, ''ஏண்டா, ஈஸ்ட் ஆப்பிரிக்காவா? எக்ஸ்போர்ட்டா! ஒரு நிமிஷம் இரு உன்னைப் பார்ஸல் பண்ணி அனுப்புகிறேன்-'' நேராக வந்து புறங்கையால் கணேஷை அடிக்க, அவன் தடுத்து நிறுத்தி ''கைகலப்பு வேண்டாம் அப்புறம் துன்புறுவீர்கள்'' என்றான்.

ரத்னா கையை உதறிக்கொண்டான். அய்யர் காயத்ரியின் அறையிலிருந்து ஓடிவந்து அவசரமாக மூடி வெளியில் தாளிட்டார். உள்ளே அவள் கதவிடிக்கும் சப்தம் கேட்டது. அதற்கேற்ப கதவு நடுங்கியது. அய்யருக்கு உடம்பு பூரா வியர்த்தது. சில இடங்களில் ரத்தக் கீறல்கள் தெரிந்தன. ''காட்டுப் பூனை மாதிரி பிராண்டறா!'' என்றார்.

''என்ன செய்யலாம் இவர்களை?''என்றான் ரத்னா.

''ஏன்! போலீசுக்குப் போன் பண்ணுங்களேன்'' என்றான் கணேஷ்.

அய்யர், ''அவுட் ஹவுஸில் தள்ளிக் கதவைச் சாத்தி வைக்கலாம்'' என்றார்.

''உத்தமமான காரியம்'' என்றான் கணேஷ்.

''வாயை மூடு. வாய்யா அய்யர். நீ இந்த கணேஷைக் கவனித்துக்கொள். பகதூர்! நீயும் பார்த்துக் கொண்டு இரு... சரஸ்வதி துப்பாக்கியை விட்டுவிடாதே... நான் இந்த ஒல்லி ஆசாமியைக் கவனித்துக் கொள்கிறேன். ஏய், நட இரண்டு பேரும்.''

கதவு தடதடவென்ற தட்டும் சத்தம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டிருந்தது. காயத்ரி களைப்படைகிறாள்.

என்னையும் கணேஷையும் ஒட்ட வைத்து மூன்று பேரும் மரப்படியில் இறக்கினார்கள். துப்பாக்கி என் முதுகில் பதிந்திருக்கக் கீழே இருந்து அந்த இந்திரா பயம் நிறைந்த கண்களுடன் தெரிந்தாள்.

''என்னம்மா தக்கத்தை!'' என்றான் கணேஷ், படிகளில் இறங்கும்போது. ''நீங்கள் செய்வது ரொம்ப முட்டாள் தனமான காரியம். நான் ஒரு வக்கீல், இந்த வீட்டிற்குக் கிளம்புவதற்கு முன்னால் என் நண்பர் போலீஸ் அதிகாரியிடம் சொல்லிவிட்டுத்தான் வந்திருக்கிறேன். நான் இன்னும் அரைமணியில் வீடு திரும்பிவில்லை என்றால் தேடிக் கொண்டு வந்துவிடுவார். விலாசம் சொல்லியிருக்கிறேன். இந்தா பார் பெண்ணே! ராத்திரிக்கு ஜெயிலுக்கு வேண்டிய சாமான்களையெல்லாம் எடுத்துக் கொண்டு வந்துவிடு.''

''நடடா! சும்மா பேசிக்கொண்டிருக்காதே...!''

''முட்டாள்தனமாக மாட்டிக்கொள்ளப் போகிறார்கள்!''

''உங்களை யார் ஒரு இடத்திலேயே அடைத்து வைக்கப் போகிறார்கள்? எங்களைப் பற்றி உனக்குத் தெரியாது... என்ன அய்யர்?''

''காலிப் பசங்களுடன் என்ன பேச்சு? நாளைக்கே குழி தோண்டிப் புதைத்து விடலாம்.''

''என்னது?'' என்றேன்.

''இந்த வீட்டை விட்டு உயிரோடு திரும்பிப் போவதாகக் கனவு கண்டு கொண்டிருக்கிறாயா?''

**அ**ப்போது கணேஷ் விநோதமாக ஒரு காரியம் செய்தான். மாடிப்படியின் கடைசிப் படியில் அப்படியே உட்கார்ந்து விட்டான். ''ஏய் எழுந்திரு! மாரில் உதை வேண்டுமா?''

''உதை பார்க்கலாம்?'' என்றான்.

உதைத்த ரத்னாவின் காலைக் கவ்விப் பிடித்துக் கொண்டு வாரிக் கவிழ்த்தான். தீடீரென்று எழுந்து வாயிற்பக்கம் ஓட, கூர்க்கா அவனைத் துரத்த, அவன் ஹாலைச் சுற்றிவர, அய்யர், எழுந்த ரத்னா, கூர்க்கா எல்லோரும் அவனைத் துரத்தி ஓட... நானும் சரஸுவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு மிக அருகில் தனியாக மாடியருகில் நிற்க, ''இவனைச் சுடப்போகிறேன், இவனைச் சுடப்போகிறேன்'' என்ற ஆவேசம் வந்தவள்போல் உரக்கக் கத்தினாள். எனக்கு வெலவெலத்தது. ஏற்பட்ட அசட்டுத் தைரியத்தில் துப்பாக்கியை ஒரு தட்டுத் தட்டிவிட்டேன். அது அப்பால் விழுந்தது. அதை அவசரமாகப் பொறுக்கிக் கொள்ளச் சென்ற சரஸ்வதி, அய்யரின் பேரில் மடேர் என்று சத்தமாக மோதி அப்படியே கீழே விழுந்து தற்காலத்துக்கு மௌனமானாள். கணேஷ் பிடிக்கு அடங்காமல் சுற்றிச் சுற்றி ஓட அவனை அவர்கள் மூவரும் துரத்த American Football மாதிரி இருந்தது. கணேஷ் அய்யரைத் தாவாங்கட்டையில் பலமாகக் குத்த, அவருக்கு இரண்டு பல்லாவது வெடித்திருக்க வேண்டும். கணேஷ் சண்டை செய்யும் விதத்தில் அனுபவமும் பயிற்சியும் தெரிந்தது. சந்தர்ப்பம் வரும்வரை பாயலாக் காட்டி ஓடி, கிடைத்தபோது செம்மையாகக் கொடுத்தான். அந்தக் கூர்க்காவை மிக அழுத்தமாக வயிற்றில் உதைத்து, அவன் அப்படியே சப்பனமிட்டு உட்கார்ந்து கொள்ள, ''ரைட்டர் ஸார்! ஓடுங்கள்! வாசலில் கார்! ஓடுங்கள், ஓடுங்கள்'' என்றான். ரத்னாவின் கழுத்தில் மாலைபோல் கையை சுற்றிப் பின்பக்கம் அவன் கையை மடக்கி ஒரு சுழற்று சுழற்றி ரத்னாவைப் பொட்டலமாக மடித்துவிட்டான். அவன் குடிகாரன் போல் சாய்ந்தான். அடிபட்டவர்கள் எழுந்து துரத்துவதற்குள் நாங்கள் ஓடி வாசலை அடைய, வசந்த் காரைக் கிளப்பிக் காத்திருக்க, நாங்கள் காரில் பாய்ந்துவிட, கார்க் கதவை மூடுவதற்குள் சர்ர்ர் என்று வளைந்து ஏழெட்டு பூந்தொட்டிகளை உருட்டித் தூள் பறந்து தெருவிற்கு வந்து விட்டோம்.

"Made it" என்றான் வாயால் மூச்சுவிட்டுக் கொண்டு. ''சரியான கும்பல்!''

வசந்த், ''எப்படி இருந்தது பாஸ்! ரொம்ப ஓடிப்பிடித்து விளையாடினீர்கள் போலிருக்கிறதே?''

''வெறுப்பேற்றாதே வசந்த்!'' என்ற இரைத்தான்!

''பாவம் காயத்ரி'' என்றேன்.

''பாவம் கணேஷ்!... இந்த ஓட்டம் எனக்கு இனித்தாங்காது ரைட்டர் ஸார்! .... இந்த மாதிரி ஒரு வீட்டுக்குள் நுழைந்து கண்ட பெண்களைக் காப்பாற்றுகிற பிஸினஸ் இனிமேல் வேண்டாம்!''

''நாம் தப்பித்துக்கொண்டு விட்டோம்! இனி அவள்?'' என்றேன்.

வசந்த் , ''பாஸ்! என்ன வினோதமான ஜாயிண்ட் பார்த்தீங்களா? நான் சொன்ன மாதிரியே இருந்தது பார்த்தீர்களா?'' என்றான்.

''என்ன சொன்னாய்?'' என்றேன்.

''காயத்ரியின் புஸ்தகத்தைப் படித்ததும் சில பாயிண்ட்ஸ் மட்டும் எனக்குத் தனிப்பட்டுத் தெரிந்தது. பாத்ரூம் கதவில் துவாரம், காயத்ரியின் அடிக்கடி சந்தேகம்... யாரோ என்னைப் பார்க்கிறார்கள்!'' ... அய்யர் மறுபடி எடுக்க வேண்டுமா என்ற அலுத்துக் கொண்டது... எல்லாவற்றையும் ஒரு சேரப் பார்த்தால் அவர்கள் ப்ளூ ஃபிலிம் எடுத்துக் கொண்டிருப்பது சுலபமாகத் தெரிந்து விட்டது. காயத்ரிக்குத் தெரியாமல்... அய்யரின் காமிரா உருண்டிருக்கிறது.''

''புரிகிறது'' என்றேன்.

காயத்ரி! காயத்ரியைக் காப்பாற்ற முடியவில்லை காயத்ரி... ஒரு வினோத வீட்டில் வாழ்க்கைப்பட்டு... சரஸு! ரத்னா! அய்யர்! இந்திரா... ஒழுக்கமற்று, செக்ஸ்... செக்ஸ் என்ற இனக் கவர்ச்சியின் வேட்கையில்

இருப்பவர்களுக்காக, அவர்கள் கோரமான, இயற்கைக்கு மாறான வேட்கைகளைத் தணிப்பதற்குப் படம் பிடித்துக் காசு பண்ணும் கூட்டத்தில் வந்து மாட்டிக் கொண்டு அங்கு நடப்பது என்ன என்றே இனம் புரியாமல் நோட்டுப் புத்தகத்தில் எழுதி வைத்து, அதை அனுப்பி எங்களை வரவழைத்து... சே! காப்பாற்ற முடியவில்லையே! என்ன செய்வோம்!

எனக்கு திடீரென்று வயிற்றில் சங்கடம் செய்தது. ''கணேஷ்!'' என்ற அவன் கையைப் பிடித்தேன்.

''என்ன ஸார்?''

''அந்த நிர்மலா! ராஜரத்தினத்தின் முதல் மனைவி!''

''ஆம். நிர்மலா!''

''அவள் கதி காயத்ரிக்கு நேர்ந்துவிட்டால்? மனைவி நிர்மலாவையும் இந்தமாதிரிப் படம் பிடித்துக் கொடுமைப் படுத்தியிருக்க வேண்டும். அதனால்தான் அவள் சித்தம் கலங்கியிருக்கிறாள்! அவளை அவுட்ஹவுஸில் அடைத்துவிட்டு மற்றொரு கல்யாணம் பண்ணிக்கொண்டு அவளை வைத்து என்ன மோசமான படங்கள்! கணேஷ். நாம் போய் விமோசனமில்லாமல் போய்விட்டது பார்த்தாயா!''

''என்ன ஸார் சொல்கிறீர்கள்? தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று உயிரோடு வந்திருக்கிறோம்...''

''காயத்ரியை எப்படியாவது காப்பாற்றியிருக்க வேண்டும். சே! நான்தான் முட்டாள்தனமாக, கவனக் குறைவாக காரியத்தையே கெடுத்து விட்டேன்'' என்றேன்.

''இப்போது மறுபடி போய் அவளை விடுவிக்க வேண்டும் என்கிறீர்களா?'' என்றான் கணேஷ்.

''எப்படியாவது, எப்படியாவது!'' என்றேன்.

''எப்படி? சொல்லுங்கள்!''

''பாவம் அந்தப் பெண்.''

''வசந்த், நான் சொன்னபடி செய்தாயா?'' என்றான் கணேஷ்.

''ஒன்று விடாமல்.''

''அப்படி என்றால் பொருள் இருக்கிறதா?''

''ஆம் டிக்கியில்''

''நிறுத்தலாம் என்று நினைக்கிறேன்''

கார் நின்றது.

கணேஷ் இறங்கி, ''சார் நீங்களும் இறங்குங்கள்'' என்றான்.

''ரைட்டர் சார்! காயத்ரியைக் காப்பாற்ற வேண்டும் என்கிறீர்கள் அல்லவா? காப்பாற்றலாம். என்னுடன் வாருங்கள்'' என்றான்.

கணேஷ் பின்புறம் சென்று டிக்கியைத் திறந்து, ''மெல்ல, மெல்ல'' என்றான்.

டிக்கியின் உள்ளே சுருட்டிக் கொண்டிருந்த ஜீவன் சுதாரித்துக் கொண்டு எழுந்து வெளிப்பட... தெருவிளக்கின் வெளிச்சம்பட.....

''காயத்ரி!'' என்றேன்.

''தாங்க்ஸ் சார், தாங்க்ஸ் சார்!'' அழுக்காக வெளிப்பட்டாள்.

''காயத்ரி நீ எப்படி? எப்படி? கணேஷ்! என்ன இது ஜீனி வேலை!''

''எல்லாம் வசந்த் வேலை! நீங்கள் முன்னால் சென்றவிட நாங்கள் பிக்சர் முடிந்து திரும்பிக் கொண்டிருக்க, மாடியில் தோட்டா சப்தம் கேட்டது. தப்பாக ஏதோ நிகழ்ந்து விட்டது என்ற தெரிந்து விட்டது. ரத்னா முதலில் ஓட, நான் வசந்திடம் பின்பக்கம் இருக்கும் படி வழியாக ஏறிச் செல்லச் சொன்னேன். காயத்ரி தனியாக அகப்பட்டால்...''

வசந்த், ''அங்கே மாடியில் நடந்தது அத்தனையும் நான் பார்த்தேன்... சார் மார்பிற்கு நேரே துப்பாக்கி பிடிக்கிறாள்

அந்த அம்மாள். அந்த அய்யர் காயத்ரியைப் பலாத்காரம ரூமிற்குள் அடைக்கின்றார். எல்லாவற்றையும் பார்த்தேன் என்றான்.

''நீ பார்த்திருப்பாய் என்பது எனக்குத் தெரியும் என்றான் கணேஷ்.

''அவளைத் தப்ப வைக்க உனக்குக் கொஞ்ச அவகாசம் கொடுப்பதற்குத்தான் கீழே கொஞ்சம் பாயல காட்டி ஓடிப் பிடித்து விளையாடினேன் அதற்குள்...''

''அதற்குள் நான் மாடி வழியா வந்து அந்த அறை கதவைத் திறந்து காயத்ரியைப் பின் பக்கத்துப் படிக வழியாக அழைத்துச் சென்று டிக்கியில் பார்சல் பண்ண விட்டேன். ஸாரி காயத்ரி! மூஞ்சியெல்லாம் க்ரீஸ் ஒட்டி கொண்டு விட்டது.''

''உங்கள் மூன்று அண்ணன்மார்களுக்கும் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்?''

''ஒரே ஒரு கைமாறு. இந்த அண்ணன் பிஸினஸ் வேண்டாம். கால் மி வசந்த்.''

கார் மறுபடி புறப்பட, காயத்ரி எனக்கருகி உட்கார்ந்திருக்க.. மிகவும் படபடப்புடன், ''மிஸ்டர் வசந் வசந்த் என்று'' உணர்ச்சி வசப்பட்டாள்.

''எல்லாம் என் எஜமானரும் மதிப்பிற்குரியவருமா கணேஷின் மூளை! அவர்தான் எல்லாம் நடத்தி வைப்பவர் பிக் பிரதர்!''

கணேஷ், ''ஷட் அப் வசந்த்... காயத்ரி! உன்னை அவர்கள் எப்படி உபயோகப்படுத்திக் கொண்டிருந்தார்கள் தெரியுமா?'' என்று கேட்டான்.

''எப்படி?''

''சொன்னால் அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்வாயா?''

''என் கணவர் என்னை ஏமாற்றிய அதிர்ச்சியையே சமாளித்து விட்டேன்!''

''திரைப்படம் எடுத்துக் கொண்டிருந்தார்கள்! உன் சந்தேகங்கள் எல்லாம் சரியே! நீயும் ரத்னாவும் தனியாகப் படுக்கையில் இருந்தபோது ரத்னா விளக்கை அணைக்க மறுத்ததை ஒரு தடவை குறிப்பிட்டிருக்கிறாய். என்ன நடந்தது தெரியுமா? திரைக்குப் பின்னாலிருந்து ஒரு சினி காமிரா சுழன்றிருக்கிறது. பாத்ரூமிலும் அதே கதை.... அப்புறம் அந்தப் பெண்ணுடன்... அப்புறம்...''

''மைகாட்!'' அவள் மௌனம், மனத்தில் அந்தக் காட்சிகளை நினைத்து எவ்வளவு கூச்சப்படுகிறாள் என்பதைக் காட்டியது... விசித்து விசித்து அழுதாள்.

''காயத்ரி! நான் ஒரு லாயர்... உன் எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்படாதே. அவர்கள்மேல் எந்த விதத்தில் கேஸ் போடுவது என்பதைப் பற்றி எல்லாம் நாளைக்குப் பேசிக் கொள்ளலாம்-நான் சொல்லும் இடத்தில் கையெழுத்துப் போட்டால் போதும், உன் கடந்த காலம் புகைபோல் மாயமாய் மறைந்துவிடும்-அழாதே. வசந்த்! காயத்ரி தங்குவதற்கு ஏதாவது ஒரு நல்ல ஹோட்டலாக முதலில் பார்...''

''இல்லை, நான் உங்களில் யாராவது ஒருத்தருடன் தங்குகிறேன். உங்கள்மேல் எனக்கு நம்பிக்கை இருக்கிறது'' என்றாள்

''உனக்கு எங்கள் மேல் நம்பிக்கை இருக்கலாம். எங்களுக்கு எங்கள் மேல் நம்பிக்கை இல்லை.''

''ஏன்?''

''காயத்ரி! நாங்கள் அந்தப் படங்களைப் பார்த்து விட்டோம் அதனால்!'' என்றான் கணேஷ்.

''அவைகளில் நீ அழகாகஇருக்கிறாய்'' என்றான் வசந்த்.

கார் ஒரு ஐந்து நட்சரத்திர ஹோட்டலை நெருங்கியது.

★ ★ ★